உ
சிவமயம்



அமரர்

# திரு. பொன்னுச்சாமி கணேசபிள்ளை

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

## 02.12.2009

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# சமர்ப்பணம்

குடும்பத்தின் ஒளிவிளக்காய் திகழ்ந்து

அன்பாலும் பண்பாலும் உயர்ந்துநின்று

வறுமையிலும் செம்மையாய் எம்மை

ஆளாக்கி வளர்த்து நல்வழி நடாத்தி

இன்று வானுறையும் தெய்வமாகிவிட்ட

எமது அன்புத் தெய்வத்தின் பொன்னடிகளில்

காணிக்கையாக இம்மலரினை

சமர்ப்பணமாக்குகின்றோம்.

ஓம் சாந்தி

இங்ஙனம்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


உ
சிவமயம்

அன்னை மடியில்

01

06

1946



காலனவன் பிடியில்

02

11

2009

# அமரர். திரு. பொன்னுச்சாமி கணேசபிள்ளை

## திதி வெண்பா

இணுவில் தனிலுதித்த சீராளன் பொன்னுச்சாமி
மகன் பேர் கணேசபிள்ளை பெரும்புகழோன் - விரோதி
ஆண்டு இரண்டாயிரத்து ஒன்பது ஐப்பசி பௌர்ணமி
திதியில் இறைவன் அரும்பதம் சேர்ந்திட்டானே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



திருச்சிற்றம்பலம்

## விநாயகர் காப்பு

பாலும் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலும் கலந்துனக்கு நான் தருவேன்
கோலம் செய் துங்கக் கரிமுகத்துத் – தூ
மணியே நீயெனக்குச் சங்கத் தமிழ் மூன்றும் தா.

## தேவாரம்

அப்பன்நீ யம்மைநீ யையனும்நீ
யன்புடைய மாமனும் மாமியும்நீ
ஒப்புடைய மாதரு மொண்பொருளும்நீ
யொருகுல முஞ்சுற்றமு மோரூரும்நீ
துயப்பனவு முய்ப்பனவுந் தோற்றுவாய்நீ
துணையா யென்னெஞ்சந் துறப்பிப்பாய்நீ
இப்பொன்நீ யிம்மணிநீ யிம்முத்தும்நீ
யிறைவன்நீ யேறூர்ந்த செல்வம்நீயே.

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே யாய சிவபத மளித்த
செல்வமே சிவ பெருமானே
இம்மையே யுன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

நீறணி பவளக் குன்றமே நின்ற
நெற்றிக்கண் உடையதோர் நெருப்பே
வேறணி புவன போகமே யோக
வெள்ளமே மேருவில் வீரா
ஆறணி சடையெம் அற்புதக் கூத்தா
அம்பொன் செய் அம்பலத் தரசே
ஏறணி கொடியெம் ஈசனே உன்னை
தொண்டனேன் இசையுமா றிசையே.

## திருப்பல்லாண்டு

சீருந் திருவும் பொலியச்
சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன்
பெற்றதார் பெறுவாருலகில்
ஊரும் உலகுங் கழற
உளறி உமைமண வாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும்
பரிசுநாம் பல்லாண்டு கூறுதும்மே.

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்
பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும்
பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும்
வேண்டுநான் மகிழ்ந்து பாடி
அறவா நீ ஆடும்போதுன்
அடியின் கீழ் இருக்க வென்றார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

கைத்தல நிறைகனி அப்பமொ டவல் பொரி
கப்பிய கரிமுகன் அடிபேணி
கற்றிடும் அடியவர் புத்தியி லுறைபவ
கற்பக மெனவினை கடிதேகும்
மத்தமு மதியமும் வைத்திடும் அரன்மகன்
மற்பொரு திரள்பய மதயானை
மத்தள வயிறனை உத்தமி புதல்வனை
மட்டவிழ் மலர்கொடு பணிவேனே
முத்தமி ழடைவினை முற்படு கிரிதனில்
முற்பட எழுதிய முதல்வோனே
முப்புர மெரி செய்த அச்சி னுறைரதம்
அச்சது பொடி செய்த அதிதீரா
அத்துய ரதுகெட சுப்பிரமணி படும்
அப்புன மதனிடை இபமாகி
அக்குற மகளுடன் அச்சிறு முருகனை
அக்கண மணமருள் பெருமாளே.

## வாழ்த்து

வான்முகிழ் வழாது பெய்க
மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க
குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க
நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி
விளங்குக உலகமெலாம்.

திருச்சிற்றம்பலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரர் உயர் திரு. பொன்னுச்சாமி கணேசபிள்ளை அவர்களின் வாழ்க்கை வரலாறு

சுற்றும் கடல் சூழும் நித்திலத் தீவாகிய இலங்கை மணித்திரு நாட்டின் மூலவளம் மிக்க மணிமுடியாக விளங்கும் யாழ்ப்பாண குடாநாட்டில் சைவ ஆலயங்களும் கீதத்தை மிகப்பாடும் அடியார் குடிகளும், சைவ ஒழுக்கம் என்பவற்றின் நிலைக்களங்களாகவும் விளங்கும் சிற்றூர் இணுவில். இதன் கிழக்குப் பகுதியில் உயர் மரபினராய் உத்தம சீலராய் இறைபணி அடியாராய் வாழ்ந்த உத்தமர் அமரர் தம்பாபிள்ளை பொன்னுச்சாமி - பரமேஸ்வரி தம்பதியினருக்கு மகனாக 1946-06-07 திகதி அன்று இப்புண்ணிய பூமியில் கணேசபிள்ளை பிறந்தார்.

இவர் தனது ஆரம்பக் கல்வியினை இன்று இணுவில் மத்திய கல்லூரியாக விளங்கும் சைவ மகா ஜனக வித்தியாசாலையில் கற்று அதன் பின் இடைநிலை கல்வியினை யாழ்/ பரமேஸ்வராக் கல்லூரியில் பயின்று வந்தார். இவருடைய உடன் பிறப்புக்களான ஆனந்தராசா, இராஜகோபால், மனோரஞ்சிததேவி, சர்வானந்தம், யோகானந்தம், மல்லிகாதேவி, ஞானசேகரம், மகேந்திரன், சுரேஸ்குமார் ஆகியோருடன் சீரோடும் சிறப்போடும் வாழ்ந்து வரும் காலத்தில் வியாபாரத்தில் ஆர்வம் கொண்ட இவர் தனது மூத்த தமையனார் கடை வைத்திருந்த குருநாகல் கோணபத்திராவில் புகையிலை வியாபாரத்தில் பாண்டித்தியம் பெற்றுவரும் காலத்தில் அவருக்கு திருமணம் செய்ய பெரியோர்கள் நிச்சயித்தனர்.

இணுவிலை பிறப்பிடமாகக் கொண்ட [illegible] கைலாயபிள்ளை, சிவக்கொழுந்து தம்பதிகளின் மகளான கமலாம்பிகையை 1969-11-04ம் திகதி திருமணம் செய்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டார். இவர்களின் இல்லறமாம் நல்லறத்தின் பயனாக கலைவாணி, கலைச்செல்வன் ஆகிய இரு பிள்ளைகளைப் பெற்று சிறப்புடன் வாழ்ந்து வந்தார். இவர் தனது மூத்த மகள் கலைவாணியை இணுவிலைச் சேர்ந்த பஞ்சாட்சரநாதனுக்கு (தீவக கல்விப் பனிமனை கல்விப் பணியாளராக தொழில்புரிந்த. அமரர்) அவர்களுக்கு திருணம் செய்து அதன் பேறாக கௌசிகன், காரணணன், கஜசரவணன் ஆகிய பேரப் பிள்ளைகளையும் அவருடைய மகனான கலைச்செல்வனு க்கு (பிரான்ஸ்) சிவகௌரியை மணம் முடித்து வைத்தனர். இதன் பேறாக கஸ்தூரி, கௌதமன், கயல், வண்ணன், கஜீபன், கௌசிகான் ஆகிய பேரச் செல்வங்களுடன் பாசத்துடன் வாழ்ந்து வந்தார்.

மேலும் தனது தொழிலான மருதனார் மடச் சந்தை வியாபாரத்தில் ஈடுபடும்போது செல்வச்சந்நிதி அன்னதானத்திற்கு அரிசி, மரக்கறிகள் கொடுத்து அனுப்பி வந்தார். மனிதில் நின்மதியுடனும், மகிழ்ச்சி யுடனும் வாழ்ந்து வந்தார்.

'பிறப்பவர் எல்லோரும் இறப்பது நியதி' என்ற கூற்றிற்கிணங்க காலன் அவரை அழைப்பதற்காக கொடிய நோயிற்கு ஆளாக்கி தாய், மனைவி, பிள்ளைகள், பேரப் பிள்ளைகள், சகோதரர், உற்றார், உறவினர் கலங்கி அழ இவ் உலகை விட்டு 02-11-2009 திங்கட்கிழமை பகல் 12.00 மணியளவில் பௌர்ணமித் திதியில் இறையடி சேர்ந்தார். இவரின் ஆத்ம சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திப்போமாக.

- சாந்தி -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



காசியப்பர் அருளிய

## ஸ்ரீ விநாயகர் கவசம்

(ராகம் - நாட்டை)

கலி விருத்தம்

அற்புதக் கணபதி யமல போற்றியே
தற்பர சண்முக சாமி போற்றியே

வளர்ச்சிகையைப் பராபரமாய் வயங்குவிநா
யகர்காக்க வாய்ந்த சென்னி
யளவுபடா வதிகவசவுந் தரதேக
மதோற்கடர்தா மமர்ந்து காக்க
விளரறநெற் றியையென்றும் விளங்கியகா
சிபர்காக்க புருவந் தம்மைத்
தளர்வின்மகோ தரர்காக்க தடவிழிகள்
பாலசந் திரனார் காக்க.

கவின் வளரு மதரங்கச முகர் காக்க
தாலங்கணக் கிரீடர் காக்க
நவில்சிபகங் கிரிசைசுதர் காக்கநனி
வாக்கைவிநா யகர்தங் காக்க
அவிர்நகைதுன் முகர்காக்க வள்ளெழிற்
செஞ்செவி பாசபாணி காக்க
அவிர்தலுறா திளங்கொடிபோல் வளர்மணிநா
சியைச்சிந்தி தார்த்தர் காக்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காமருபூ முகந்தன்னைக் குணேசர்நனி
காக்ககளங் கணேசர் காக்க
வாமமுறு மிருதோளும் வயங்குகந்த
பூர்வசர்தா மகிழ்ந்து காக்க
ஏமமுறு மணிமுலைவிக் காக்க
சன்காக்க விதயந் தன்னைத்
தோமகலுங் கணநாதர் காக்கவகட்
டினைத்துலங்கே ரம்பர் காக்க.

பக்கமிரண் டையுந்தரா தரர்காக்க
பிருட்டத்தைப் பாவ நீக்கும்
விக்கினக ரன்காக்க விளங்கிலிங்கம்
வியாபூ டணர்தாங் காக்க
தக்ககுய்யந் தன்னைவக் கிரதுண்டர்
காக்கசக னத்தை யல்லல்
உக்ககண பன்காக்க வூருவைமயாங்
களமூர்த்தி யுவந்து காக்க.

தாழ்முழந்தாண் மகாபுத்தி காக்கவிரு
பதமேக தந்தர் காக்க
வாழ்கரங்கப் பிரப்பிரசா தனர்காக்க
முன்னைய வணங்கு வார்நோய்
ஆழ்தரச்செய் யாசாபூ ரகர்காக்க
விரல்பதும் வத்தர் காக்க
கேழ்கிளரு நகங்கள்விநா யகர்காக்க
கிழக்கினிற் புத்தீசர் காக்க.

அக்கினியிற் சித்தீசர் காக்கவுமா
புத்திரர் தென்திசை காக்க
மிக்கநிரு தியிற்கணே சுரர்காக்க
விக்கினவர்த் தனர்மேற் கென்னுந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திக்கதனிற் காக்கவா யுவிற்கசகன்
னன்காக்க திகழு தீசி
தக்கநிதி பன்காக்க வடகிழக்கு
லீசநந் தனரே காக்க.

ஏகதந்தர் பகன்முழுதுங் காக்கவிர
வினுஞ்சந்தி யிரண்டன் மாட்டும்
ஓகையின்விக் கினகிருது காக்கவிராக்
கதர்பூத முறுவே தாள
மோகினிபே யிவையாதி யுயிர்த் திறத்தால்
வரந்துயரு முடிவிலாத
வேகமுறு பிணிபலவும் விலக்குபுபா
சாங்குசர்தாம் விரைந்து காக்க.

மதிஞானந் தவந்தான மானமொளி
புகழ்குலம்வண் சரீர முற்றும்
பதிவான தனந்தானி யங்கிரக
மனைவியமைந்தர் பயினட் பாதிக்
கதியாவுங் கலந்துசர்வா யுதர்காக்க
காமர்பவுத் திரர்முன் னான
விதியாருஞ் சுற்றமெலா மயூரேச
ரெஞ்ஞான்றும் விரும்பிக் காக்க.

வென்றிசீ விதங்கபிலர் காக்ககரி
யாதியெலாம் விகடர் காக்க
என்றிவ்வா றிதுதனைமுக் காலமுமோ
திடினும்பா லிடையூ றொன்றும்
ஒன்றுறா முனிவரர்கா ளறிமின்கள்
யாரொருவ ரோதி னாலு
மன்றவாங் கவர்தேகம் பிணியறவச்
சிரதேக மாகி மன்னும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

ஓம் சரவணபவ



# கந்தர் சஷ்டி கவசம்

**காப்பு**

அமரர் இடர் தீர அமரம் புரிந்த
குமரன் அடி நெஞ்சே குறி.

துதிப்போர்க்கு வல்வினைபோம், துன்பம்போம் நெஞ்சில்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் – கதித்(து) ஓங்கும்
நிட்டையுங் கைகூடும், நிமலர் அருள் கந்தர்
சஷ்டி கவசந் தனை

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவும் செங்கதிர் வேலோன்
பாதமிரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி ஆட
மையல் நடஞ்செயும் மயில்வா கனனார்
கையில்வே லாலெனைக் காக்கவென் றுவந்து
வரவர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா எண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிரிகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவண பவனார் சடுதியில் வருக
ரவண பவச ரரரர ரரர
ரிவண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரவண வீரா நமோ நம
நிபவ சரவண நிறநிற நிறென
வசரவணபவ வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை யாளும் இளையோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரெண் டிலங்க
விரைந் தெனைக் காக்க வேலோன் வருக
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையும் கிலியும்
கிலியும் சௌவும் கிளரொளி ஐயும்
நிலைபெற்று என்முன் நித்தமும் ஒளிரும்
சண்முகன் தீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாம்சிவ குகன்தினம் வருக
ஆறு முகமும் அணிமுடி யாறும்
நீறிடும் நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச்செவ் வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகு குண்டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூஷணமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழகுடைய திருவயி றுந்தியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்தினம் பதித்த நற்சீ ராவும்
இரு தொடையழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனில் சிலம் பொலிமுழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடுடு டுடுடுடு டுடுடுடு டுடுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்தனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரம்மகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோத னென்று
உன்திரு வடியை உறுதியென்றெண்ணும்
என்தலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க்கு யிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வேலி ரண்டும் கண்ணினைக் காக்க
விழிசெவி யிரண்டும் வேலவர் காக்க
நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க்ன்ன மிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்ன வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க
நாணாம் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்பெண் குறிகளை அயில்வேல் காக்க
பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வல்வேல் காக்க
பணைத்தொடை யிரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிர லடியினை அருள்வேல் காக்க
கைகளி ரண்டும் கருணைவேல் காக்க
முன்கை யிரண்டும் முரண்வேல் காக்க
பின்கை யிரண்டும் பின்னவ ளிருக்க
நாவில் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பால் நாடியை முனைவேல் காக்க
எப்பொழுதும் எனை எதிர்வேல் காக்க
அடியேன் வதனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க
ஏமத்தில் சாமத்தில் எதிர்வேல் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியினில் நோக்க
தாக்க தாக்க தடையறத் தாக்க
பார்க்கப் பார்க்கப் பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்ல பூதம் வலாட்டிகப் பேய்கள்
அல்லல் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராட் ஷதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசிகாட் டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலும் இருட்டிலும் எதிர்ப்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோடு அனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டாளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட
ஆனை அடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைகள் என்பும்
நகமும் மயிரும் நீள்முடி மண்டையும்
பாவைக ளுடனே பலகல சத்துடன்
மனையில் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டிய செருக்கும் ஒட்டியப் பாவையும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதும்அஞ்சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலறிக் குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
கால தூதாளனைக் கண்டால் கலங்கிட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட் டலறி மதிகெட் டோடப்
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுடன் அங்கம் கதறிடக் கட்டு
கட்டி உருட்டு கைகால் முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு முழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில்செதி லாக
சொக்கு சொக்கு சூர்பகை சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலதுவாக
விடுவிடு வேலை வெருண்டது ஓட
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித்தொடர்ந்தோட
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதினில் இறங்க
ஒளிப்பும் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதம் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைசயம் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரிதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத்து அரணை பருஅரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லாதோட நீயெனக் கருள்வாய்
ஈரேழு லகமும் எனக்கு றவாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்கா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்ணாள ரசரும் மகிழ்ந்து றவாகவும்
உன்னைத் துதிக்க உன்திரு நாமம்
சரவண பவனே சையொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொளி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வே லவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை யழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்துறை கதிர்வேல் முருகா
பழநிப் பதிவாழ் பால குமரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தில் மாமலை யுறும் செங்கல்வ ராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
எந்நா இருக்க யானுனைப் பாட
எனைத்தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவசமாக
ஆடினேன் நாடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன் அருளாக
அன்புடன் ரட்சித் தன்னமும் சொன்னமும்
மெத்த மெத்தாக வேலா யுதனார்
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசம்
வாழ்க வாழ்க என் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை அடியேன் எத்தனை செயினும்
பெற்றவன் நீகுரு பொறுப்ப துன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென் றன்பாய்ப் பிரிய மளித்து
மைந்த னென்மீதுன் மனமகிழ்ந் தருளித்
தஞ்ச மென்றடியார் தழைத்திட வருள்செய்
கந்தர் சஷ்டிக் கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துட னாளும்
ஆசா ரத்துடன் அங்கம் துலக்கி
நேச முடனொரு நினைவது வாகி
கந்தர் சஷ்டிக் கவசமி தனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்து நீறணிய
அட்ட திக்கு உள்ளோர டங்கலும் வசமாய்த்
திசைமன்னர் எண்மர் சேர்ந்தங் கருளுவர்
மாற்றலர் எல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமதன் எனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளும் ஈரெட் டாய் வாழ்வர்
கந்தர்கை வேலாம் கவசத் தடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியால்க் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிப்பொடி யாக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறிந் தெனதுள்ளம் அஷ்ட லட்சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்து ணவாகச்
சூரபத் மாவைத் துணிந்தகை யதனால்
இருபத் தேழ்வர்க் குவந்த முதளித்த
குருபரன் பழநிக் குன்றினிலி ருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத் தாட்கொள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவா போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேளே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோர் அரசே
மயில்நட மிடுவோய் மலரடி சரணம்
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய

# சிவபுராணம்

திருச்சிற்றம்பலம்

## திருவாசகச் சிறப்பு

தொல்லை யிரும்பிறவிச் சூழுந்தளை நீக்கி
அல்ல லறுத்தானந்தம் ஆக்கியதே – எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூ ரெங்கோன்
திருவா சகமென்னுந் தேன்.

நமச்சிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க
கோகழியாண்ட குருமணிதன் தாள் வாழ்க
ஆகமமாகி நின்று அண்ணிப்பான் தாள் வாழ்க
ஏகன் அநேகன் இறைவனடி வாழ்க
வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறந்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க
ஈசன் அடி போற்றி எந்தை அடி போற்றி
தேசன் அடி போற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடி போற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடி போற்றி
சீரார் பெருந்துறைநம் தேவன் அடி போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆராத இன்பம் அருளுமலை போற்றி
சிவன் அவன் என் சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன் தாள் வணங்கிச்
சிந்தை மகிழ சிவபுரா ணந்தன்னை
முந்தை வினை முழுதும் ஓய உரைப்பன்யான்
கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற்கு எட்டா எழிலார் கழல் இறைஞ்சி
விண்நிறைந்து மண்நிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறைந்து எல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுரராகி முனிவராய்த் தேவராய்
செல்லா நின்ற இத்தாவரசங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைந்தேன் எம்பெருமான்
மெய்யே உன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யஎன் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமான னாம்விமலா
பொய்யா யினஎல்லாம் போயகல வந்தருளி
மெஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப்பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவுஇறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள் தருவாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய்ச் சேயாய் நணியானே
மாற்ற மனங்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார்சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்கள் ஓர் ஐந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட முடியா மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டிப்
புறந்தோல் போர்த்தெங்கும் புழு அழுக்கு மூடி
மலஞ்சோறும் உண்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்துள் உருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன் மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேன்ஆர் அமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள் புரிந்து நெஞ்சில் வஞ்சம் கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீராய் உருக்கி என் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக்கு அன்பனே யாவையுமாய் அல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்து என்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்த மெய்ஞ்ஞானத்தால் கொண்டுணர்வார் தம் கருத்தின்
நோக்கரியே நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வும் இலாப் புண்ணியனே
காக்கும் எம் காவலனே காண்பரிய பேர் ஒளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக்காய் நின்ற
தோற்றச் சுடர்ஒளியாய் சொல்லாத நுண் உணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்து அறிவாய்
தேற்றனே தேற்றத் தெளிவே என் சிந்தனையுள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேன் எம் ஐயா அரனே ஓ என்று என்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டுஇங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ள முலக்குரம்பை கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும்நாதனே
தில்லையுள் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி அறுப்பானே ஓ என்று
சொல்லற்கு அரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஔவையார் அருளிய
# விநாயகர் அகவல்

சீதக் களபச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலஇசை பாடப்
பொன் அரை ஞாணும் பூந்துகி லாடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தழ கெறிப்பப்
பேழை வயிறும் பெரும் பாரக் கோடும்
வேழ முகமும் விளங்குசெந் தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சில் குடிகொண்ட நீல மேனியும்
நான்ற வாயு நாலிரு புயமும்
மூன்று கண்ணு மும்மதச்
இரண்டு செவியும் இலங்குபொன் முடியும்
திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதங் கடந்த கற்பகக் களிறே
இப்பொழு தென்னை ஆட்கொள வேண்டித்
தாயாய் எனக்குத் தானெழுந் தருளி
மாயாப் பிறவி மயக்கம் அறுத்துத்
திருந்திய முதலைத் தெழுத்துந் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென் உளத்தனில் புகுந்து
குருவடிவாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திறமிது பொருளென
வாடா வகைதான் மகிழ்ந் தெனக் கருளிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோடாயுதத்தாற் கொடுவினை களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டியென் செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையுங் காட்டி
ஐம்புலன் தன்னை அடக்கும் உபாயம்
இன்புறு கருணையி இனிதெனக் கருளிக்
கருவிகள் ஒடுங்கும் கருத்தினை அறிவித்து
இருவினை தன்னை அறுத்திருள் கடிந்து
தலமொரு நான்குந் தந்தெனக் கருளி
மலமொரு மூன்றின் மயக்கம் அறுத்தே
ஒன்பது வாயில் ஒருமந் திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதுங் காட்டி
ஆறா தாரத் தங்கிசை நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரை யறுத்தே
இடைபிங் கலையின் எழுத்தறிவித்துக்
கடையிற் சுழுமுனைக் கபாலமுங் காட்டி
மூன்று மண்டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவில் உணர்த்திக்
குண்டலி யதனில் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலாதாரத்தின் மூண்டெழு கனலைக்
காலால் எழுப்புங் கருத்தறி வித்தே
அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்
குமுத சகாயன் குணத்தையுங் கூறி
இடைச்சக் கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற்சக் கரத்தின் உறுப்பையுங் காட்டிச்
சண்முக தூலமும் சதுர்முக சூக்கமும்
எண்முகமாக இனிதெனக் கருளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரியெட்டு நிலையும் தெரிசனப் படுத்திக்
கருத்தினி கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி இனிதெனக் கருளி
என்னை அறிவித்து எனக்கருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்தே
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கியே என்றன் சிந்தை தெளிவித்து
இருள்வெளி இரண்டுக் கொன்றிடமென்ன
அருள் தரும் ஆனந்தத் தழுத்திஎன் செவியில்
எல்லையில்லா ஆனந்தம் அளித்து
அல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்
சத்தத்தி னுள்ளே சதாசிவம் காட்டிச்
சித்தத்தி னுள்ளே சிவலிங்கம் காட்டி
அணுவுக் கணுவாய் அப்பாலுக் கப்பா லாய்க்

கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும் பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலையறி வித்துத்
தத்துவ நிலையைத் தந்தெனை யாண்ட
வித்தக! விநாயக! விரைகழல் சரணே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திருவெம்பாவை

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள்தடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலி போய்
வீதியாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டு இங்ஙன்
ஏதேனு மாகாள் கிடந்தாள் என்னேஎன்னே
ஈதே எந்தோழி பரிசேலோர் எம்பாவாய்

பாசம் பரஞ்சோதிக் கென்பாய் இராப்பகல்நாம்
பேசும்போ தெப்போதிப் போதார் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசீ இவையுஞ் சிலவோ விளையாடி
ஏசு மிட மீதோ விண்ணோர்க் ளேத்துதற்குக்
கூசு மலர்ப்பாதந் தந்தருள வந்தருளும்
தேசன் சிவலோகன் தில்லைச்சிற றம்பலத்துள்
ஈசனார்க் கன்பார்யாம் ஆரேலோர் எம்பாவாய

முத்தன்ன வெண்ணகையாய் முன்வந் தெரிரெழுத்தென்
அத்தன் ஆனந்தன் அமுதனென் றள்ளூறித்
தித்திக்கப பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையீர் ஈசன் பழஅடியீர் பாங்குடையீர்
புக்கடியோம் புன்மைதீர்த் தாட்கொண்டாற் பொல்லாதோ
எத்தோநஜின் அன்புடைமை எல்லோ மறியோமோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்தம் அழகியோர் பாடாரோ நம்சிவனை
இத்தனையும் வேண்டும் எமக்கேலோர் எம்பாவாய

ஒள்நித் திலநகையாய் இன்னம் புலர்ந்தின்றோ
வண்ணக் கிளிமொழியார் எல்லாரும் வந்தாரோ
எண்ணிக்கொ டுள்ளவா சொல்லுகோம் அவ்வளவும்
கண்ணைத் துயின்ற வமே காலத்தைப் போக்காதே
விண்ணுக் கொருமருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசந்துள்ளம்
உள்நெக்கு நின்றுருக யாமாட்டோம் நீயேவந்
தெண்ணக் குறையில் துயிலேலோர் எம்பாவய்

மாலறியா நான்முகனுங் காணா மலையினை நாம்
போலறிவோம் என்றுள்ள பொக்கங்க ளேபேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ கடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்
கோலமும் நம்மைஆட் கொண்டருளிக் கோதாட்டும்
சீலமும் பாடிச் சிவனே சிவனேயென்று
ஓல மிடினு முணராய் உணராய்க்காண்
ஏலக்குழலி பரிசேலோர் எம்பாவாய்

மானே நீ நென்னலை நாளை வந்துங்களை
நானே யெழுப்புவன் என்றலும் நாணாமே
போன திசை பகராய் இன்னம் புலர்த்தினறோ
வானே நிலவே பிறவே அறிவரியான்
தானே வந்தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்
ஊனே உருகாய் உனக்கே உறுமெமக்கும்
ஏனோர்க்குந் தங்கோனைப் பாடேலோர் எம்பாவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னே இவையுஞ் சிலவோ பலவமரர்
உன்னற் கரியா னொருவன் இருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய்திறப்பாய்
தென்னா என்னாமுன்னந் தீசேர் மெழுகொப்பாய்
என்னானை என்னரையன் இன்னமுதென் றெல்லோமும்
சொன்னோங்கேள் வெவ்வேறாய் இன்னந் துயிலுதியோ
வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால்
என்னே துயிலின் பரிசேலோர் எம்பாவாய்.

கோழி சிலம்பச் சிலம்புங் குருகெங்கும்
ஏழி லியம்ப இயம்பும்வெண் சங்கெங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோம் கேட்டிலையோ
வாழியீ தென்ன வுறக்கமோ வாய்திறவாய்
ஆழியான் அன்புடைமை ஆமாறும் இவ்வாறே
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழை பங்காளனையே பாடலோர் எம்பாவாய்.

முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்றவுன் சீரடியோம்
உன்னடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே எங்கணவ ராவார் அவருகந்து
சொன்னபரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையே எமக்கெங்கோன் நல்குதியேல்
என்ன குறைவு மிலோமேலோர் எம்பாவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதாளம் ஏழினுங்கீழ்ச் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியும் எல்லாப்பொருள் முடிவே
பேதை ஒருபால் திருமேனி ஒன்றல்லன்
வேதமுதல் விண்ணோரு மண்ணுந் துதித்தாலும்
ஓதஉலவா ஒருதோழன் தொண்டருளன்
கோதில் குலத்தரன்றன் கோயிற் பிணாப்பிள்ளைகள்
ஏதவனூர் ஏதவன்பேர் ஆருற்றார் ஆர் அயலார்
ஏதவனைப் பாடும் பரிசேலோர் எம்பாவாய்.

மொய்யார் தடம்பொய்கை புக்கு முகேரென்னக்
கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி
ஐயா வழியடி யோம் வாழ்ந்தோங்காண் ஆரழல்போற்
செய்யா, வெண்ணீறாடி செல்வா சிறுமருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
ஐயா நீ ஆட்கொண்டருளும் விளையாட்டில்
உய்வார்கள் உய்யும் வகையெல்ல முய்ந்தொழிந்தோம்
எய்யாமற் காப்பாய் எமையேலோர் எம்பாவாய்.

ஆர்த்த பிறவித் துயர்கெட நாமார்த்தாடும்
தீர்த்தனற் றில்லைச்சிற் றம்பலத்தே தீயாடும்
கூத்தன் இவ்வானுங் குவலயமும் எல்லோமும்
காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைகள்
ஆர்ப்பரவஞ் செய்ய அணிகுழல்மேல் வண்டார்ப்ப
பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
ஏத்தி யிஞ்ருசுனைநீ ராடேலோர் எம்பாவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பைங்குவளைக் கார்மலராய் செங்கமலப் பைம்போதால்
அங்கங் குருகினத்தாற் பின்னும் அரவத்தால்
தங்கள் மலங்கழுவு வார் வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
பொங்குமடுவிற் புகப்பாய்ந்து பாய்ந்துநம்
சங்கஞ் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கல்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய்.

காதோர் குழையாடப் பைம்புண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம்பலம் பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருளா மாபாடிச்
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதி திறம்பாடி யந்தமா மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி யாடேலோர் எம்பாவாய்.

ஓரொருகால் எம்பெருமான் என்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தங் களிகூர
நீரொருகால் ஓவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைத்தான்
பணியாள்
பேரரையற் கிங்ஙனே பித்தொருவர் ஆமாறும்
ஆரொருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்தாள்
வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
ஏருருவப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னிக் கடலைச் சுருக்கி யெழுந்துடையாள்
என்னத் திகழ்தெம்மை ஆளுடையாள் இட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேல்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நந்தம்மை ஆளுடையாள்
தன்னற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள் நமக்கு முன் சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோர் எம்பாவாய்.

செங்க ணவன்பால் திசைமுகன்பால் தேவர்கள்பால்
ஏங்கும் இலாதோர் இன்பம்நம் பாலதாக்
கொங்குண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி
இங்குநம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதந் தந்தருளுஞ் சேவகனை
அங்கண் அரசை அடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல்பாயந் தாடேலோர் எம்பாவாய்.

அண்ணாமலையான் அடிக்கமலம் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகை வீறற்றாற்போல்
கண்ணார் இரவி கதிர்வந்த கார்கரப்பத்
தண்ணார் ஒளிமழுங்கித் தாரகைகள் தாமகலப்
பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகிக்
கண்ணா ரமுதாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணேஇப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலமென்று
அங்கப் பழஞ்சொற் புதுக்குமெம் அச்சத்தால்
எங்கள் பொருமான் உனக்கொன் றுரைப்போம் கேள்
எங்கொங்கை நின்னன்ப ரல்லார்தோள் சேரற்க
கங்குல் பகலெங்கண் மற்றொன்றுங் காணற்க
இங்கிப் பரிசே எமக்கு எங்கோன் நல்குதியேல்
எங்கெழிலென் ஞாயி றெமக்கேலோர் எம்பாவாய்.

போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுகநின் அந்தமாம் செந்தளிர்கள்
போற்றி யெல்லா வுயிர்க்குந் தோற்றமாம் பொற்பாதம்
போற்றி யெல்லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றி யெல்லா வுயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றிமால் நான்முகனுங் காணாத புண்டரீகம்
போற்றியாம் உய்ய ஆட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழிநீ ராடேலோர் எம்பாவாய்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவிளக்கு வழிபாடு

## அகவல்

விளக்கே திருவிளக்கே வேந்தன் உடன்பிறப்பே
ஜோதி மணி விளக்கே சீதேவி பொன்மணியே
அந்தி விளக்கே அலங்கார நாயகியே
காந்தி விளக்கே காமாட்சித் தாயாரே
பசும்பொன் விளக்கு வைத்துப் பஞ்சுத் திரிபோட்டுக்
குளம்போல எண்ணெய் விட்டுக் கோலமுடன்
ஏற்றி வைத்தேன்
ஏற்றினேன் நெய்விளக்கு எந்தன் குடிவிளங்க
வைத்தேன் திருவிளக்கு மாளிகையும் தான் விளங்க
மாளிகையில் சோதியுள்ள மாதாவைக் கண்டு
மகிழ்தேன் யான்
மாங்கல்யப் பிச்சை மடிப்பிச்சை தாருமம்மா
சந்தானப் பிச்சையுடன் தனங்களும் தாரும் அம்மா
பெட்டி நிறையப் பூஷணங்கள் தாரும் அம்மா
பட்டி நிறையப் பால் பசுவைத் தாரும் அம்மா
கொட்டகை நிறையக குதிரைகளைத் தாரும் அம்மா
புகழுடம்பைத் தாரும் அம்மா பக்கத்தில் நில்லுமம்மா
அல்லும் பகலும் என்றன் அண்டையில் நில்லுமம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிளக்கு நமஸ்காரம்

சேவித்து எழுந்திருந்தேன் தேவி வடிவங் கண்டேன்
வச்சிரக் கிரீடம் கண்டேன் வைடூரிய மேனி கண்டேன்
முத்துக்கொண்டை கண்டேன் முழுப்பச்சை மாலை
கண்டேன்
சவுரி முடி கண்டேன் தாழை மடல் சூடக் கண்டேன்
பின்னழகு கண்டேன் பிறைபோல் நெற்றி கண்டேன்
சாந்துடன் நெற்றி கண்டேன் தாயார் வடிவம் கண்டேன்

கமலத் திருமுகத்தில் கஸ்தூரிப் பொட்டுக் கண்டேன்
மார்பில் பதக்கம் மின்ன மாலை அசையைக் கண்டேன்
கை வளையல் கலகலெனைக் கணையாழி மின்னக் கண்டேன்

தங்க ஒட்டியாணம் தகதகென ஜொலிக்கக் கண்டேன்
காலிற் சிலம்பு கண்டேன் காலாழி பீலி கண்டேன்
மங்கள நாயகியை மனங்குளிரக் கண்டு மகிழ்ந்த
அடியான் நான்
அன்னையே அருந்துணையே அருகிருந்து காருமம்மா
வந்த வினை அகற்றி மகா பாக்கியம் தாரும் அம்மா
தாயாரே உன்றன் தாளடியில் சரணம் என்றேன்
மாதாவே உன்றன் மலரடியில் நான் பணிந்தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சகலாகலாவல்லிமாலை

திருச்சிற்றம்பலம்

1. வெண்டா மரைக்கன்றி நின் பதந்
தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாது கொ
லோசக மேழு மளித்
துண்டா னுறங்க வொழித்தான்பித்
தாகவுண் டாக்கும் வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே
சகல கலாவல்லியே.

2. நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்
வாய்பங்க யாசனைத்திற்
கூடும் பசும்பொற் கொடியே
கனதனக் குன்றுமைப்பாற்
காடுஞ் சுமக்குங் கரும்பே
சகல கலாவல்லியே.

3. அளிக்குஞ் செழுந்தமிழ்த் தெள்ளமு
தார்ந்துன் னருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ
லோவுளங் கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக்கண்டு
களிக்கும் கலாப மயிலே
சகல கலாவல்லியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. தூக்கும் பனுவற் றுறைதோய்ந்த
கல்வியுஞ் சொற்சுவை தோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்
வாய்வட நூற்கடலும்
தேக்குஞ் செழுந்தமிழ் செல்வமுந்
தொண்டர்செந் நாவினின்று
காக்குங் கருணைக் கடலே
சகல கலாவல்லியே.

4. பஞ்சப் பிதந்தரு செய்யபொற்
பாதபங்கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென்
னேநெடுந் தாட்கமலத்
தஞ்சத் துவச முயர்த்தோன்செந்
நாவு மகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய்
சகல கலாவல்லியே.

6. பண்ணும் பரதமும் கல்வியுந்
தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல்
காயெழு தாமரையும்
விண்ணும் புவியும் புனலுங்
கனலும்வெங் காலுமன்பர்
கண்ணுங் கருத்தும் நிறைந்தாய்
சகல கலாவல்லியே.

7. பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கனல்
காயுளங் கொண்டு தொண்டர்
தீட்டுங் கலைத்தமிழ் தீம்பா
லமுதந் தெளிக்கும் வண்ணங்
காட்டும்வெள் ளோதிமப் பேடே
சகல கலாவல்லியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. சொல்லிற் பனமு மவதான
முங்கவி சொல்லவல்ல
நல்வித்தை யுந்தந் தடிமைகொள்
வாய்நளி னாசனஞ்சேர்
செல்விக் கரிதென் றொருகால
முஞ்சிதை யாமைநல்குங்
கல்விப் பெருஞ்செல்வப் பேறே
சகல கலாவல்லியே.

9. சொற்கும் பொருட்டு முயிராம்மெய்ஞ்
ஞானத்தின் றோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர் யார்
நிலந்தோய் புழைக்கை
நற்குஞ்சரத்தின் பிடியோ
டரசன்ன நாணநடை
கற்கும் பதாம்புயத்தாயே
சகல கலாவல்லியே.

10. மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னருமென்
பண்கண் டளவிற் பணியச்செய்
வாய்ப்படைப் போன் முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண்
டேனும் விளம்பிலுன்போற்
கண்கண்ட தெய்வமுளதோ
சகல கலாவல்லியே.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## ஸ்ரீ ஆஞ்சநேயர் போற்றி

ஓம் அஞ்சனை மைந்தா போற்றி
ஓம் அஞ்சினை வென்றாய் போற்றி
ஓம் சொல்லின் செல்வா போற்றி
ஓம் வில்லின் கணையே போற்றி
ஓம் தோத்திரப் பிரியா போற்றி
ஓம் சாத்திரத் தலைவா போற்றி
ஓம் சத்திய விரதா போற்றி
ஓம் வித்தகு வீரா போற்றி
ஓம் ஏழிசை நதியே போற்றி
ஓம் ஆழியைக் கடந்தாய் போற்றி
ஓம் தன்பலம் அறியாய் போற்றி
ஓம் என்னகம் நிறைவாய் போற்றி
ஓம் பிரமச் சரியா போற்றி
ஓம் பரமன் சொரூபா போற்றி
ஓம் பேரறி வாளா போற்றி
ஓம் சீருப காரா போற்றி
ஓம் அச்சுதன் துணைவா போற்றி
ஓம் வச்சிர வடிவா போற்றி
ஓம் பிங்கள வர்ணா போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| ஓம் மங்கள ரூபா | போற்றி |
| ஓம் புஜபல தீரா | போற்றி |
| ஓம் விஜயன் துணைவா | போற்றி |
| ஒம் சிரஞ்சீவியனே | போற்றி |
| ஓம் பரஞ்சுடரொளியே | போற்றி |
| ஓம் அருணனை வென்றாய் | போற்றி |
| ஓம் தருண மழையே | போற்றி |
| ஓம் வானரச் செல்வா | போற்றி |
| ஓம் தீனரட் சகனே | போற்றி |
| ஓம் வாயுபுத் திரனே | போற்றி |
| ஓம் தூயரத் தினமே | போற்றி |
| ஓம் இலக்கவன் உயிரே | போற்றி |
| ஓம் கலக்கம் தீர்ப்பாய் | போற்றி |
| ஓம் ஐம்புலன் வென்றாய் | போற்றி |
| ஓம் எம்குல தேவா | போற்றி |
| ஓம் இராம தூதா | போற்றி |
| ஓம் நாமப் பிரியா | போற்றி |
| ஓம் மந்தமாருதே | போற்றி |
| ஓம் சிந்தனைச் செல்வா | போற்றி |
| ஓம் சஞ்சீவி ராயா | போற்றி |
| ஓம் பஞ்ச முகனே | போற்றி |
| ஓம் விசுவ ரூபா | போற்றி |
| ஓம் விசுவேஸ் வரனே | போற்றி |
| ஓம் ஆஞ்ச நேயா | போற்றி |
| ஓம் வாஞ்சை யானாய் | போற்றி |
| ஓம் சுக்ரீவ சகனே | போற்றி |
| ஓம் துக்கம் களைவாய் | போற்றி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் யோகனு மானே போற்றி
ஓம் ஆகமும் அறிந்தாய் போற்றி
ஓம் லங்கநா சனனே போற்றி
ஓம் தங்கமே னியனே போற்றி
ஓம் புதிரா னவனே போற்றி
ஓம் கதியா னவனே போற்றி
ஓம் ஆற்றல் வடிவா போற்றி
ஓம் போற்றல் உடையாய் போற்றி
ஓம் அறிவா லயனே போற்றி

ஓம் நெறிகற் றவனே போற்றி
ஓம் ஈரநெஞ் சுடையாய் போற்றி
ஓம் நாரணன் துணையே போற்றி
ஓம் கவிக்கலத் திலகா போற்றி
ஓம் பவித்திர மானாய் போற்றி
ஓம் பிங்காட் சகனே போற்றி
ஓம் சங்கடம் தீர்ப்பாய் போற்றி
ஓம் விண்ணில் பறந்தாய் போற்றி
ஓம் கண்ணில் நிறைந்தாய் போற்றி
ஓம் கேஸரி மகனே போற்றி
ஓம் பாசீம் உடையாய் போற்றி
ஓம் வீடணன் துணையே போற்றி
ஓம் நாடரும் நலனே போற்றி
ஓம் வாலுடை வரதா போற்றி
ஓம் சீலமும் உடையாய் போற்றி
ஓம் மாபெரும் தொண்டா போற்றி
ஓம் தாபம் தொலைப்பாய் போற்றி
ஓம் இராமேஷ் டகனே போற்றி
ஓம் ஷேம மளிப்பாய் போற்றி

ஓம் அமிதவிக் ரமனே போற்றி
ஓம் எமையணு கிடுவாய் போற்றி
ஓம் அனிலாத் மஜனே போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் நினைவில் உறைவாய் போற்றி
ஓம் ருத்திரப்பிரியா போற்றி
ஓம் முத்திரைப் பொன்னே போற்றி
ஓம் ப்லவகேஸ் வரனே போற்றி
ஓம் கலைகற் றவனே போற்றி
ஓம் அட்சயத் துவேசா போற்றி
ஓம் சட்டென வருவாய் போற்றி
ஓம் கனிகள் உண்பாய் போற்றி
ஓம் நனிசுகம் தருவாய் போற்றி
ஓம் மஹாப லிஷ்டா போற்றி
ஓம் சகாய தேவா போற்றி
ஓம் அஹிமஹி மர்த்தனா போற்றி
ஓம் சசிவோத் தமனே போற்றி
ஓம் வராக முகனே போற்றி
ஓம் சரீர சுகனே போற்றி
ஓம் கருட முகனே போற்றி

ஓம் கடிவிஷம் தீர்ப்பாய் போற்றி
ஓம் ஹயக்கி ரீவா போற்றி
ஓம் மயக்கம் தீர்ப்பாய் போற்றி
ஓம் நரசிம் மமுகா போற்றி
ஓம் நடுநிலை யருள்வாய் போற்றி
ஓம் வீர அனுமானே போற்றி
ஓம் தீரம் அருள்வாய் போற்றி
ஓம் தவப்பிர காசா போற்றி
ஓம் சிவப்பிர காசா போற்றி
ஓம் உருவில் உயிரே போற்றி
ஓம் உயிரின் உணர்வே போற்றி
ஓம் செல்வம் தருவாய் போற்றி
ஓம் அல்லல் ஒழிப்பாய் போற்றி
ஓம் விரைவில் வருவாய் போற்றி
ஓம் நிறைவைத் தருவாய் போற்றி

**ஓம் ஜெய ஹனுமானுகி ஜெய்!!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கோளறு திருப்பதிகம்

வேயுறு தோளிபங்கன் விடம்உண்டகண்டன்
மிகநல்ல வீணைதடவி
மாசறுதிங்கள் கங்கை முடிமேல் அணிந்துஎன்
உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி
சனிபாம்பு இரண்டும் உடனே
ஆசறுநல்ல நல்ல அவை நல்லநல்ல
அடியா ரவர்க்குமிகவே

என்பொடுகொம்பொடாமை இவைமார்பிலங்க
எருதேறி ஏழையுடனே
பொன்பொதி மத்தமாவை புனல்சூழவந்தென்
உளமே புகுந்தஅதனால்
ஒன்பதொடு ஒன்றோடுஏழு பதினெட்டோடு ஆறும்
உடனாய நாள்கள் அவைதாம்
அன்பொடுநல்ல நல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவளர் பவளமேனி ஒளி நீறணிந்து
உமையோடும் வெள்ளை விடைமேல்
முருகலர்கொன்றைதிங்கள் முடிமேலணிந்தென்
உளமேபுகுந்த அதனால்
திருமகள் கலைய தூர்தி செயமாதுபூமி
திசைதெய்சமான பலவும்
அருந்நெதிநல்ல நல்ல அவை நல்லநல்ல
அடியா ரவர்க்குமிகவே.

மதிநுதல் மங்கையோடு வடஆலிருந்து
மறையோதும் எங்கள்பரமன்
நதியொடுகொன்றைமாலை முடிமேலணிந்தென்
உளமேபுகுந்த அதனால்
கொதியுறுகாலன் அங்கி நமனோடு தூதர்
கொடுநோய்க ளானபலவும்
அதிகுணம் நல்லநல்ல அவைநல்லநல்ல
அடியா ரவர்க்குமிகவே

நஞ்சணிகண்டன் எந்தை மடவாள்த னோடும்
விடையேறு நங்கள் பரமன்
துஞ்சிருள்வுன்னிகொன்றை முடிமேலணிந்தென்
உளமேபு தந்த அதனால்
வெஞ்சின அவுணரோடும் உருமிடியும்மின்னும்
மிகையான பூதம் அவையும்
அஞ்சிடும்நல்லநல்ல அவைநல்லநல்ல
அடியா ரவர்க்குமிகவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வான்வரி அதளதாடை வரிகோவணத்தர்
மடவாள் தனோடும் உடனாய்
நாண்மலர் வன்னிகொன்றை நதிசூடிவந்தென்
உளமேபுகுந்த அதனால்
கோளரி உழுவையொடு கொலையானை கேழல்
கொடுநாக மோடுகாடி
ஆளரிநல்ல நல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்குமிகவே

செப்பிளமுலைநன்மங்கை ஒருபாகமாக
விடையேறும்செல்வன் அடைவார்
ஒப்பிளமதியும் அப்பும் முடிமேலணிந்தென்
உளமேபுகுந்த அதனால்
வெப்பபொடுகுளிரும்வாதம் மிகையான பித்தும்
வினையானவந்து நலியா
அப்படி நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்குமிகவே

வேள்பட விழிசெய்தன்று விடை மேலிருந்து
மடவாள் தனோடும் உடனாய்
வாண்மதிவன்னிகொன்றை மலர்மூசூடிசந்தென்
உளமே புகுந்த அதனால்
ஏழ்கடல்ம் இலங்கை அரையன் தனோடும்
இடரான வந்து நலியா
ஆழ்கடல் நல்ல அவைநல்லநல்ல
அடியா ரவர்க்குமிகவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலபல வேடமாகும் பரனாரிபாகன்
பசுவேறும் எங்கள் பரமன்
சலமகளோடுஎருக்கு முடிமேலணிந்தென்
உளமேபுகுந்த அதனால்
மலர்மிசை யோனும்மாலும் மறை யாடுதேவர்
வருகாலமான பலவும்
அலைகடல் மேருநல்ல அவை நல்லநல்ல
அடியா ரவர்க்குமிகவே

கொத்தவர் குழலியோடு விசையற்குநல்கு
குணமாயவேட விகிர்தன்
மத்தமும்மதியுநாகம் முடிமேலணிந்தென்
உளமேபுகுந்த அதனால்
புத்தரொடு அமணைவாதில் அழிவிக்கும் அண்ணல்
திருநீறு செம்மைதிடமே
அத்தகுநல்லநல்ல அவைநல்லநல்ல
அடியா ரவர்க்குமிகவே

தேனமலர் பொழில்கொள் ஆலை விளைசெந்நெல் துன்னி
வளர்செம்பொன் எங்கும் நிகழ
நான்முகன் ஆதியாய் பிரமாபுரத்து
மறைஞான ஞானமுனிவன்
தானுறு கோளும்நாளும் அடியாரைவந்து
நலியாதவண்ணம் உரைசெய்
ஆனசொன்மாலை ஓதுமைம் அடியார்கள்வானில்
அரசாள்வார் ஆணைநமதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## நடராஜப் பத்து

மண்ணாதி பூ தமொடு விண்ணாதியண்டம் நீ
    மறைநான்கி னடிமுடியுநீ
மதியும்நீ ரவியும்நீ புனலும்நீ யனலும்நீ
    மண்டலமி ரண்டேழும்நீ
பெண்ணும்நீ யாணும் பல்லுயிர்க் குயிரும்நீ
    பிறவும்நீ யொருவனீயே
பேதாதி பேதம்நீ பாதாதி கேசம்நீ
    பெற்றதாய் தந்தைநீயே
நண்ணுநற் பொருளும்நீ யிருளும்நீ யொளியும்நீ
    நாதனாய் வந்தவனும்நீ
நவில்கின்ற கிரகங்க ளொன்பதும்நீயிந்த
    நானிலந் தந்தவனுநீ
எண்ணுரிய சீவகோடிகளீன்ற வப்பனே
    ஈசனே சிவகாமி நேசனே தில்லைவாழ்
எனையீன்ற நடராஜனே

மானாட மழுவாட மதியாடப் புனலாட
    மங்கைசிவ காமியாட
மாலாட நூலாட மறையாடத் திரையாட
    வனசமுறை பிரமனாடக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோனாட வானுலகு கூட்டமெல்ல மாடக்
குஞ்சர முகத்தனாடக்
குண்டல மிரண்டாடத்
தண்டை புலியுடையாயாடக்
குழந்தைமுரு கேசனாடத்
தானாட வாடுசம் பந்தரிந் திரர் முனிவர்
தனியட்ட பாலராடத்
தகு தும்பை யறுகாட நந்திவா கனமாடத்
தாளநெறி மாதராட
யானாட வினையோட வெணைநாடியிதுவேளை
யிசைவிருதொ டாடிவருவாய்
ஈசனே சிவகாமி நேசனே தில்லைவாழ்
எனையீன்ற நடராஜனே

கடலென்ற புவிமீதி லலையென்ற வுருக்கொண்டு
கனவென்ற வாழ்வைநம்பிக்
காற்றென்ற மூவாசை யாற்றொணச் சுழலிலே
கட்டுண்டு நித்தநித்தம்
உடலென்ற கும்பிக்கு உணவென்ற விரைதேடி
யோயாம லிரவுபகலும்
உண்டுண்டு றங்குவதைக் கண்டதேயல்லாம
லொருபய னடைந்திலேனைத்
தடமென்ற வடிகரையிற் பந்தபாசங்களெனுந்
தாபரம் பின்னடிட்டுத்
தாயென்றுசேயென்றுநீயென்று நானென்று
தமியேனை யிவ்வண்ணமாய்
இடைநின்று தடைசெய்ய வேனென்றுகேளா
திருப்பதுவு மழகாகுமோ
ஈசனே சிவகாமி நேசனே தில்லைவாழ்
எனையீன்ற நடராஜனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வம்புசூனியமல்ல வைப்பல்ல மாரணம்
பகர்வசிய தம்பனமலப்
பாதாளவஞ்சனம் பரகாயப் பிரவேச
பண்பல்ல ஜாலமல்ல
அம்புகுண்டுகள்விலக மொழியுமந்திரமல்ல
வாகாய குளிகையல்ல
அன்போடு செய்கின்ற வாதமோடிகளல்ல
வரியமோ கனமுமல்லக்
கும்பமுனி மச்சமுனி சட்டமுனி பிரம்மரிஷி
கொங்கணர் புலிப்பாணியுங்
கோரக்கர் தனவந்தரி போகமுனி யிரரெல்லாங்
கூறும் வைத்தியமல்ல
எமபரம வுன்னடியை நீங்காது நிலைநிற்கு
மிச்சையை யெனக்கருவாய்
ஈசனே சிவகாமி நேசனே தில்லைவாழ்
எனையீன்ற நடராஜனே

நொந்துவந்தேனென்று பலதர முரைக்கவும்
நுழையாத தென்னமதியோ
நுட்பநெறியறியாத பிள்ளையைப் பெற்றுமதை
நோக்காத தந்தையுண்டோ
சந்ததமுந் தஞ்சமென் றடியைப் பிடிக்கவுந்த
தளராத நெஞ்சமுண்டோ
தந்திமுகன றுமுகவ னிருபிள்ளை யில்லையோ
சந்ததியி லாதநீயோ
விந்தைதரு சாலங்க ளுன்னிட மிருக்குதே
வேதமுஞ் சாஸ்திரமு முன்னையே புகழுதே
வேடிக்கையி துவல்லவோ
இந்தவுல கீரேழு மேணளித் தாய்சொல்லு
இனியுன்னை விடுவதில்லை
ஈசனே சிவகாமி நேசனே தில்லைவாழ்
எனையீன்ற நடராஜனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிகண்டு நின்னடிகள் துதியாத போதிலும்
வாஞ்சை யில்லாதபோதும்
வாலாயய மாய்க்கோயில் சுற்றாத போதிலும்
வஞ்சமே செய்தபோதும்
மொழியெதுகை மோனையில் லாமலே பாடினும்
மூர்க்கனேன் மூடனேனும்
மோசமே செய்யினுந் தேசமேகவரினும்
முழுக்காமியே யாயினும்
பழியெனக்கல்லவே தாய்தந்தை யர்க்கலோ
பார்த்தவர்கள் சொல்லார்களோ
பாரறிய மனைகொளப் பாதியுடலீந்தநீ
பாலனைக் காக்கொணாதோ
எழில்பெருகு மண்டலங்களிசைவா யமைத்தநீ
என்குறைகள் தீர்த்தலரிதோ
ஈசனே சிவகாமி நேசனே தில்லைவாழ்
எனையீன்ற நடராஜனே

அன்னை தந்தையர்களெனையீன்றதற் கழுவெனோ
வறிவற்றதற் கழுவெனோ
அல்லாமல் நான்முகன் றன்னைநொந்த தழுவெனோ
வாசைமூன்றுக் கழுவெனோ
முன்பிறப்பென்ன வினைசெய்ததென்றழுவெனோ
மூடருறவுக் கழுவெனோ
முன்னிலென் வினைவந்து மூளுமென் றழுவெனோ
முத்தியை நினைந்தழுவெனோ
தன்னைநொந் தழுவேனோ வுன்னைநொந் தழுவேனே
தரித்திரி திசைக்கழுவெனோ
தாரணியி லுன்றனருள் பெற்றபெரியோர்களைத்
தழுவாததற் கழுவெனோ
இன்னுமெப் பிறவிவருமென் றழுவெனோவவைக்
ளெல்லா முரைக்கவருவாய்
ஈசனே சிவகாமி நேசனே தில்லைவாழ்
எனையீன்ற நடராஜனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காயாமரங்களிற் பூ பிஞ் சறுத்தெனோ
கன்னியர்கள் பழிகொண்டெனோ
கடனென்று பொருள்பறித்தேவயிறெரித்தெனோ
கடுவழியில் முள்ளிட்டனோ
தாயா ருடற்குள் வரவென்னவினைசெய்தெனோ
தந்தபொருளிலை யென்றுநான்
தானென்ற கொவமொடு கொலைகளவு செய்தெனே
தபசிகளை யேசினேனோ
வாயார நின்ற பலபொய் சொன்னெனே வித்து
வாமிசரைவசை சொன்னெனோ
வந்தவரை மரியாதை செய்யா தடித்தெனோ
வழக்கிலோரஞ் சொன்னெனோ
ஈயாதலோபியே யானாலுமென் பிழைகள்
எல்லாம் பொறுத்தருளுவாய்
ஈசனே சிவகாமி நேசனே தில்லைவாழ்
எனையீன்ற நடராஜனே

தாயாரிருந்தொன்ன தந்தையுமிருந்தென்ன
தன்பிறவி யுறவுகோடி
தனமலை குவித்தென்ன கனபெயரெடுத்தென்ன
தாரணியை யாண்டுமென்ன
சேயர்களிருந்தென்னை குருவாய்த் திரிந்தென்ன
சீடர்க ளிருந்துமென்ன
சித்துபலகற்றென்ன நித்தமும் விரதங்கள்
செய்தென்ன நதிகளெல்லாம்
ஓயாத மூழ்கினும் பயனென்ன எமனோலை
ஒன்றினைத் தான்றடுக்கி
வுதவுமோ விவையெலாஞ் சிந்தையுற வென்றுநா
னுன்னிருபாதம் பிடித்தேன்
ஈயாதிருக்கத் தியாகராஜப் பெயரு
மிசையுமோ வேண்புனைந்தாய்
ஈசனே சிவகாமி நேசனே தில்லைவாழ்
எனையீன்ற நடராஜனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னமுஞ் சொல்லவோ வுன்மனங் கல்லோ
விரும்போ பெரும்பாரையோ
இருசெவியு மந்தமோ கருமபல வந்தமோ
ஏழைபங்கின னல்லவோ
என்னன்னை மோகமோ யாரிட்டசாபமோ
ஈதுனக் கழகுதானோ
இருபிள்ளை தாபமோ யார்மீது கோபமோ
இனியுமுன்றனை விடுவெனோ
உன்னிவிட்டெசென் ராலுமுய்திடுவெனோ
உனையடுத்துங் கெடுவேனோ
ஓயாபிதென்குற்ற முன்குற்றமொன்றுமலை
யுற்றுப்பார் பெற்றவையா
என்னையாள் பவனும்நீ யடிமைநா னாதலா
லினியரு ளளிக்கநினைவாய்
ஈசனே சிவகாமி நேசனே தில்லைவாழ்
எனையீன்ற நடராஜனே

சனிராகு கேதுபுதன் சுக்கிரன் செவ்வாய்
குருச் சந்திரன் சூரியனிவரை
சற்றெனக் குள்ளாக்கிராசிபன்னி ரெண்டையும்
சமமாய் நிறுத்தியுடனே
பனியொத்த நகூத்திரங்களிரு பத்தேழும்
பக்குவப்படுத்தி பின்னால்
பகர்கின்ற காரணங்கள் பதினொன்றையும் வெட்டி
பலரையும் அதட்டியென்முன்
கனிபோல வேபேசி கெடுநினை நினைக்கின்ற
கசடர்களை யுங்கசக்கி
கர்த்தனின் தொண்டர்க்கு தொண்டரின்
தொண்டர்கள் தொழும்பனாக்கி
இனியவள மருவுசிறு மணவைமுனி சாமியெனை
யாள்வதினி யுன்கடன்காண்
ஈசனே சிவகாமி நேசனே தில்லைவாழ்
எனையீன்ற நடராஜனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## விநாயகர் வணக்கம்

சுக்லாம்பரதரம் விஷ்ணும்
சசிவர்ணம் சதுர்புஜம்
ப்ரஸன்னவதனம் த்யாயேத்
ஸர்வ லிக்னோப சாந்தயே

மூஷிகவாஹன மோதக ஹஸ்த
சாமரகர்ண விலம்பிக ஸூத்ர
வாமன ரூப மஹேஸ்வர புத்ர
விக்னவிநாயக பாதநமஸ்தே.

வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனி நுடங்காது - பூச்சொண்டு
துப்பார் திருமேனி தும்பிக்கை யான்பாதம்
தப்பாமல் சார்வார் தமக்கு.

பாலுந் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலும் கலந்துனக்கு நான் தருவேன் - கோலம்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீஎனக்குச்
சங்கத் தமிழ்மூன்றும் தா.

திருவாக்கும்; செய்கருமம் கைகூட்டும்; செஞ்சொல்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்;
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலால் கூப்புவர் தம்கை.

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## அனுமன் வணக்கம்

புத்திர்பலம் யசோதைர்யம்
நிர்ப்பயத்வ மரோகதா
அஜாட்யம் வாக்படுத்வம் ச
ஹனூமத் ஸ்மரணாத் பவேத்
ஆஞ்சநேயாய வித்மஹே
ராமதூதாய தீமஹி
தந்நோ மாருதி ப்ரசோதயாத்:

– மாருதி ஸ்தோத்திரம்

அஞ்சிலே ஒன்று பெற்றான்
அஞ்சிலே ஒன்றைத் தாவி
அஞ்சிலே ஒன்ற ஆறாக
ஆரியற் காக ஏகி
அஞ்சிலே ஒன்று பெற்ற
அணங்கைக்கண் டயலார் ஊரில்
அஞ்சிலே ஒன்றை வைத்தான்
அவனெம்மை அளித்துக் காப்பான் - கம்பர்

கோதண்ட தீர குருராம நாமத்தைத்
தீதண்டாவா றடியேன் செப்புதற்கு - கோதண்டா
மாருதியே! அஞ்சனையாள் மைந்தனே! நற்கருணை
வாருதியே! நீ துணையே வா

– ஆனந்தராமத்யானம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்து

வா ழி நகரத்தார் வள்ளன்மை மிக்கோர்கள்
ஊழிபலவும் உயர்ந்திருக்க - ஆழிசூழ்
இத்தலத்தில் கோயில் இயற்றினோர் வாழ்கவே
எத்தலமும் போற்ற இனிது

-திருமுருக.கிருபானந்த வாரியார்.

பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு
பல்கோடி நூறாயிரம்
மல்லாண்ட திண்தோள் மணிவண்ணா உன்
சேவடி செவ்வி திருக்காப்பு

-பெரியாழ்வார்

வான்முகில்வழாது பெய்க!
மலிவளம் சுரக்க! மன்னன்
கோன்முறை அரசு செய்க!
குறைவிலாது உயிர்கள் வாழ்க!
நான்மறை அறங்கள் ஓங்க!
நற்றவம் வேள்வி மல்க!
மேன்மை கொள் சைவ நீதி
விளங்குக உலகம் எல்லாம்.

வையம் நீடுக மாமழை மன்னுக
மெய் விரும்பிய அன்பர் விளங்குக
சைவ நன்னெறி தான் தழைத்து ஓங்குக
தெய்வவெண் திருநீறு சிறக்கவே

ஆறிருதடந்தோள் வாழ்க, ஆறுமுகம் வாழ்க, வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க, குக்குடம் வாழ்க, செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க, யானைதன் அணங்கு வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க, வாழ்கசீர் அடியார்எல்லாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ ராமஜெயம்

**ஸ்ரீ ராம ஜய ராம ஜய ஜய ராம்**

**என்று ஒவ்வொரு நாளும் 21 முறை சொன்னால் நினைத்தது நடக்கும்.**

## ஸ்ரீ மாருதி க்ருபை உண்டாக

ஸர்வ கல்யாண தாதாரம்
ஸர்வ வாபத்கந வாரகம்
அபார கருணா மூர்த்திம்
ஆஞ்சநேயம் நமாம் யஹம்
துஷ்ட கிரஹங்கள் விலக
அஞ்ஜனா கர்ப்ப ஸம்பூதம்
குமாரம் ப்ரும்ஹசாரிணம்
துஷ்ட க்ரஹ வினாசாய
ஹனுமந்த முபாஸ்மஹே

**சர்வ மங்களம் பொங்க**

சதுர்நவதி மந்த்ரஜ்ஞ:
பௌஸ்த்ய பலதர்ப்பஹா
ஸர்வலக்ஷ்மீப்ரத;
ஸ்ரீமாநங்கத ப்ரிய ஈஸ்வர:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### காரியங்களில் வெற்றி பெற

ஸ்ரீ ராமதூத மஹாதீர
ருத்ரவீர்ய ஸமுத்பவ
அஞ்ஜனா கர்ப்ப ஸம்பூத
வாயுபுத்ர நமோஸ்துதே

### காரிய சித்தி உண்டாக

அஸாத்ய ஸாதக ஸ்வாமிந்!
அஸாத்யம் தவ கிம் வத
ராமதுஸத க்ருபாஸிந்தோ!
மத்கார்யம் ஸாதய ப்ரபோ

ஸ்ரீராம தூதாய, ஆஞ்சநேயாய, வாயுபுத்ராய, மஹாபலாய, ஸீதாதுக்க நிவாரகாய, லங்கா விதாஹகாய, மஹாபல ப்ரசண்டாய, பல்குனஸகாய, ஸகல ப்ரம்மாண்ட பாலகாய, ஸப்த ஸமுத்ர நிராலங்கிதாய, பிங்கள நயநாய, அமித விக்ரமாய, ஸஞ்ஜீவிநீ ஸமாநயன ஸமர்த்தாய, அங்கத லக்ஷ்மண கபிஸைந்ய ப்ராண நிர்வாஹகாய, தசகண்ட வித்வம்ஸநாய, ராமேஷ்டாய, ஸீதாஸஹித ராம சந்த்ர ப்ரஸாதகாய ஹநூமதே நம:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சிவபெருமான் வணக்கம்

உலகெ லாம் உணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாய்.

பித்தா பிறைசூடி பெருமானே அருளாளா
எத்தான் மறவாதே நினைக்கின்றேன் மனத் துன்னை
வைத்தாய் பெண்ணைத் தென்பால் வெண்ணெய்
நல்லூர் அருட்டுறையுள்
அத்தா உனக்காளாய் இனி அல்லேன் எனலாமே

குனித்த புருவமும் கொவ்வைச் செவ்
வாயிற் குமிண் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல்
மேனியிற் பால் வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்த பொற்
பாதமுங் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே
இந்த மாநிலத்தே.

பால்நினைந் தூட்டுந் தாயினுஞ் சாலப்
பரிந்து நீ பாவியே னுடைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊனினை யுருக்கி யுள்ளொளி பெருக்கி
யுலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெருமானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தே
னெங்கெழுந் தருளுவ தினியே.

பெற்ற தாய்தனை மகமறந் தாலும்
பிள்ளையைப் பெறுந் தாய்மறந்தாலும்
உற்ற தேகத்தை உயிர்மறந் தாலும்
உயிரை மேவிய உடல்மறந் தாலும்
கற்ற நெஞ்சகங் கலைமறந் தாலும்
கண்கள் நின்றிமைப் பதுமறந் தாலும்
நற்ற வத்தவர் உள்ளிருந் தோங்கும்
நமச்சி வாயத்தை நான்மற வேனே

புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா
உன் அடி என்மனத்தே
வழுவாது இருக்க வரம்தர
வேண்டும் இவ்வையகத்தே
தொழுவார்க்கு இரங்கி இருந்து
அருள் செய் பாதிரிப்புலியூர்ச்
செழுநீர்ப் புனல் கங்கை
செஞ்சடைமேல் வைத்த தீவண்ணனே.

அன்றே என்றன் ஆவியும்
உடலும் உடைமை எல்லாமும்
குன்றே அனையாய் என்னை ஆள்
கொண்ட போதே கொண்டிலையோ
இன்றோர் இடையூறு எனக்குண்டோ
எண்தோள் முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழைசெய்வாய்
நானோ இதற்கு நாயகமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளையார் கதை



## காப்பு

கரும்பும் இளநீருங் காரெள்ளுந் தேனும்
விரும்பும் அவல்பலவும் மேன்மேல் அருந்திக்
குணமுடைய னாய்வந்து குற்றங்கள் தீர்க்குங்
கணபதியே இக்கதைக்கு காப்பு.

திருவிளங்கு மான்மருகா சேவதனில் ஏறி
வரும் அரன்றான் ஈன்றருளும் மைந்தா - முருகனுக்கு
முன்பிறந்த யானை முகவா உனைத்தொழுவேன்
என் கதைக்கு நீ என்றும் காப்பு.

## விநாயகர் துதி

திருவாக்குஞ் செய்கருமங் கைகூட்டுஞ் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனைமு கத்தானைக்
காதலாற் கூப்புவர் தம் கை

ஒற்றை மருப்பும் ஓரிரண்டு கைத்தலமும்
வெற்றி புனைந்த விழிமூன்றும் - பெற்றதொரு
தண்டைக்கால் வாரணத்தைத் தன்மனதில் எப்பொழுதும்
கொண்டக்கால் வாராது கூற்று.

பாலுந் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலும் கலந்து உனக்கு நான்தருவேன் - கோலம்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீஎனக்குச்
சங்கத் தமிழ்மூன்றும் தா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சப்பாணி

எள்ளு பொரிதேன் அவல்அப்பமிக்கும் பயறும் இளநீரும்
வள்ளிக் கிழங்கும் மாம்பழமும், வாழைப்பழமும், பலாப்பழமும்
வெள்ளைப்பாலும், மோதகமும் விரும்பிப்படைந்தேன் சந்நிதியில்
கொள்ளைக் கருணைக் கணபதியே கொட்டி அருள்க சப்பாணி.

சண்டப் பெருச்சாளி ஏறிச் சடைகொண்ட வையத் துலாவி,
அண்டத்து அமரர் துதிக்க அடியார்க்கு அருளும் பிரானே:
எண்திக்கும் அன்பர்கள் பார்க்க இணையற்ற பேரொளி வீசக்,
குண்டைக் கணபதி நம்பி கொடுங்கையாற் சப்பாணி கொட்டே.

## சரஸ்வதி துதி

புத்தகத் துள்ளுறை மாதே பூவில் அமர்ந்திடு வாழ்வே
வித்தகப் பெண்பிள்ளாய் நங்காய் வேதப் பொருளுக்கு இறைவீ
முத்தின் குடைஉடை யாளே ழீவுல குந்தொழுது ஏத்துஞ்
செப்புக் கவித்த முலையாய் செவ்வரி ஓடிய கண்ணாய்
தக்கோலந் தின்னும் வாயாய் சரஸ்வதி என்னுந் திருவே
எக்காலமும் உன்னைத் தொழுவேன் இயல்இசை நாடகம் என்னும்
முத்தமிழ்க் கல்விகள் எல்லாம் முழுவதும் எனக்கருள் செய்துஎன்
சித்தந் தனில்நீ இருந்து திருவருள் செய்திடு வாயே.

## அதிகாரம்

பொன்னிறந் கடுக்கும் புனற்செறி குடுமித்
தென்மலை இருந்த சீர்சால் முனிவன்
கந்த மும்மதக் கரிமுகன் கதைதனைச்
செந்தமிழ் வகையால் தெளிவுறச் செப்பினேன்
அன்னதிற் பிறவில் அரில்தபத் திரட்டித்
தொன்னெறி விளங்கச் சொல்லுவன் கதையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கதை

மந்திர கிரியில் வடபால் ஆங்குஓர்
இந்துதவழ் சோலை இராசமா நகரியில்
அந்தணன் ஒருவனும் ஆயிழை ஒருத்தியுஞ்
சுந்தரப் புதல்வரைப் பெறுதல் வேண்டிக்
கடவுள் ஆலயமுங் கடிமலர்ப் பொய்கையும்
தடநிழற் பள்ளியுந் தாம்பல சமைத்துப்
புதல்வரைத் தருகெனப் பொருப்பு அரசு ஈன்ற
மதர்விழி பாகனை வழிபடும் நாளில்
மற்றவர் புரியும் மாதவங் கண்டு
சிற்றிடை உமையாள் சிவன்அடி வணங்கிப்
பரனே சிவனே பல்லுயிர்க்கு உயிரே
அரனே மறையவர்க்கு அருள்புரிந்து அருளென
அந்தஅந் தணனுக்கு இந்தநற் பிறப்பில்
மைந்தரில் லைஎன்று மறுத்துஅரன் உரைப்ப
எப்பரிசு ஆயினும் எம்பொருட்டு ஒருசுதன்
தப்பிலா மறையோன் தனக்குஅருள் செய்கென
எமைஆ ளுடைய உமையாள் மொழிய
இமையா முக்கண் இறைவன் வெகுண்டு
பெண்சொற் கேட்டல் பேதமை என்று
பண்சொற் பயிலும் பாவையை நோக்கிப்
பேதாய் நீபோய்ப் பிறஎன மொழிய
மாதுமை அவளுள் மனந்தளர்வு உற்றுப்
பொன்றிடும் மானிட புன்பிறப்பு எய்துதல்
நன்றல என்றே நடுக்கமுற்று உரைப்பக்
கறைமிடற்று அண்ணல் கருணை கூர்ந்து
பிறைநுதல் அவட்குநீ பிள்ளை யாகச்
சென்றுஅவண் வளர்ந்து சிலபகல் கழித்தால்
மன்றல் செய்து அருள்வோம் வருந்தலை என்று
விடைகொடுத்து அருள விலங்கல்மா மகளும்
பெடைமயிற் சாயற் பெண்மக வாஆகித்
தார்மலி மார்பன் சதுர்மறைக் கிழவன்
சீர்மலி மனைவி திருவயிற்று உதித்துப்
பாவையுங் சிற்றிலும் பந்தொடு கழங்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாவையும் பயின்ற இயல்பினள் ஆகி
ஐயாண்டு அடைந்தபின் அன்னையும் அத்தனும்
மையார் கருங்குழல் வாணுதல் தன்னை
மானுட மறையோர்க்கு வதுவை செய்திடக்
கான்அமர் குழலியைக் கருதிக் கேட்பப்
பிறப்புஇறப்பு இல்லாப் பெரியோற்கு அன்றி
அறத்தகு வதுவைக்கு அமையோன் யான்என
மற்றவன் தன்னைஉன் மணமக னாகப்
பெற்றிடல் அரிதெனப் பெயர்த்து அவர் பேச
அருந்தவ முயற்சியால் அணுகுவேன் யான்எனக்
கருந்தட நெடுங்கண் கவுரிஅங்கு உரைப்ப
மருமலி கமல மலர்த்தடத்து அருகில்
தருமலி நிழல்தவச் சாலையது அமைத்துப்
பணியணி பற்பல பாங்கியர் சூழ
அணிமலர்க் குழல்உமை அருந்தவம் புரிதலும்
அரிவை தன்அரந்தவம் அறிவோம் யாம்என
இருவரும் அறியா இமையவர் பெருமான்
மான்இடம் ஏந்தும் வண்ணமது ஒழிந்து
மானிட யோக மறையவன் ஆகிக்
குடையோடு தண்டுநற் குண்டிகை கொண்டு
மடமயில் தவம்புரி வாவிக் கரையிற்
கண்ணுதல் வந்து கருணை காட்டித்
தண்நறுங் கூந்தல் தையலை நோக்கி
மின்பெறு நுண்இடை மெல்லிய லாய்நீ
என்பெறத் தவம்இங்கு இயற்றுவது என்றலுங்
கொன்றைவார் சடையனைக் கூட என்று உரைத்தலும்
நன்று எனச் சிரித்து நான்மறை யோனும்
மாட்டினில் ஏறி மான்மழு தரித்துக்
காட்டினில் கடலையில் கணத்துடன் ஆடிப்
பாம்பும் எலும்பும் பல்தலை மாலையுஞ்
சாம்பரும் அணிந்து தலையோடு ஏந்திப்
பிச்சைகொண்டு உழலும் பித்தன் தன்னை
நச்சிநீர் செய்தவம் நகைதரும் நுமக்கெனப்
பூங்கொடி அருந்தவம் பூசுரன் குலைத்தலும்
ஆங்குஅவள் நாணமுற்று அணிமனை புகுதச்
சேடியர் வந்து செழுமலர்க் குழலியை
வாடுதல் ஒழிகென மனம்மிகத் தேற்றிச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தூர வாள்நுதற் சேடியர் சிலர்போய்த்
தந்தைதாய் இருவர் தாளிணை வணங்கி
வாவிக் கரையில் வந்து ஒரு மறையோன்
பாவைதன் செய்கையைப் பற்றினன் என்றலுந்
தோடுஅலர் கமலத் தொடைமறை முனியை
ஆடக மாடத்து அணிமனை கொணர்கஎன
மாடக யாழ்முரல் மங்கையர் ஓடி
நீடிய புகழாய் நீ எழுந்த அருள்என
மைமலர்க் குழலி வந்துஎனை அழைக்கில்
அம்மனைப் புகுவன்என்று அந்தணன் உரைத்தலும்
பொற்றொடி நீபோய்ப் பொய்கையில் நின்ற
நற்ற முனியை நடாத்திக் கொணர்கென
சிவனை இகழ்ந்த சிற்றறிவு உடையோன்
அவனையான் சென்று இங்கு அழைத்திடேன் என்று
சிற்றிடை மடந்தையுஞ் சீறின ளாகி
மற்றைய மாதர் மதிமுகம் நோக்கி
நெற்றியிற் கண்ணுடை நிமலனுக்கு அல்லவென்
பொற்புஅமர் கொங்கை பொருந்துதற்கு அரிதால்
மானிட வேட மறையவன் தனக்கு
யான்வெளிப் படுவ தில்லைஎன்று இசைப்ப
மனையிடை வந்த மாமுனி தன்னை
இணைஅடி தொழுதல் இளையோர்க்கு இயல்பெனத்
தந்தையுந் தாயுந் தகைபெற மொழியச்
சிந்தை குளிர்ந்து சீறுதல் ஒழிந்து
தாய்ச்சொல் மறுத்தல் பாவம் என்று அஞ்சி
ஆயிழை தானும் அவன் எதிர்சென்று
சுற்றிவந்து அவனடி சுந்தரி வணங்கி
மற்றவன் தன்னை மனையிற் கொணர்ந்து
ஆதியம் பகவற்கு அன்பன் ஆகும்
வேதியன் பழைய விருத்தன்என்று எண்ணி
ஆசனம் நல்கி அருக்கியம் முதலாய்
பாதபூ சனைகள் பண்ணிய பின்னர்ப்
போனகம் படைத்துப் பொரிக்கறி பருப்புநெய்
ஆன்பால் மாங்கனி அழகிய பலாச்சுளை
தேன்கத லிப்பழஞ் சீர்பெறப் படைத்து
அந்தணன் தன்னை அமுது செய்வித்துச்
சந்தனங் குங்குமச் சாந்திவை கொடுத்துத்
தக்கோ லத்தோடு சாதிக் காயும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பூரத் தொடு கவின்பெறக் கொண்டு
வெள்ளிலை அடைக்காய் விளங்கிய பொன்னின்
ஒள்ளிய தட்டில் உவந்துமுன் வைத்துச்
சிவன் எனப் பாவனை செய்து நினைந்து
தவமுறை முனிவனைத் தாளிணை வணங்கத்
தேன்அமர் குழலி திருமுகம் நோக்கி
மோனமா முனிபுன் முறுவல் காட்டிக்
கற்றைக் சடையுங் கரமொார நான்கும்
நெற்றியில் நயனமும் நீல கண்டமும்
மானும் மழுவும் மலர்க்கரத்து இலங்கக்
கூன்மதி நிலவுங் கொழித்திட முடிமேல்
வரந்தரு முதல்வன் மடமயில் காணக்
கரந்ததன் உருவங் காட்டிமுன் நிற்ப
மரகத மேனி மலைமகள் தானும்
விரைவொடு அங்கு அவன் அடி வீழ்ந்து இறைஞ் சினனே
அரிஅயன் இந்திரன் அமரர் விஞ்சையர்
கருடர் கின்னரர் காய வாசியர்
ஏதமில் முனிவர் அவுணர் இராக்கதர்
பூதர் இயக்கர்கிம் புருடர் அலகை
சித்தர் தாரகைகந் தருவர்கள் முதலாய்க்
கணிக்கரும் பதினென் கணத்தில் உள் ளவரும்
மணிக்கருங் களத்தனை வந்தடைந்து அதன்பின்
மன்றல்அங் குழலிக்கு வதுவைநாள் குறித்துத்
தென்றல்வந்து இலங்கு மன்னில் அகத்துப்
பொன்திகழ் பவளப் பொற்கால் நாட்டி
மாணிக் கத்தால் வளைபல பரப்பி
ஆணிப்பொன் தகட்டால் அழகுற வேய்ந்து
நித்தில மாலை நிரைநிரை தூக்கிப்
பக்திகள் தோறும் பலமணி பதித்துத்
தோரணம் நாட்டித் துகில்விதா னித்துப்
பூரணப் பொற்குடம் பொலிவுற வைத்துத்
திக்குத் தோறுந் திருவிளக்கு ஏற்றிப்
பக்திப் படர்முளைப் பாலிகை பரப்பிக்
கன்னுலுங் கமுகுங் கதலியும் நாட்டிப்
பன்மலர் நாற்றிப் பந்தர்சோ டித்து
நலமிகு கைவலோர் நஞ்சுஅணி மிடற்றனைக்
குலவிய திருமணக் கோலம் புனைந்தார்
வருகரர் மகளிர் மலைகள் தன்னைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமணக் கோலஞ் செய்தனர் ஆங்கே
எம்பிரானையும் இளங்கொடி தன்னையும்
உம்மர் எல்லாம் ஒருங்குடன் கூடிக்
கடல்என விளங்குங் காவணந் தன்னிற்
சுடர்விடு பவளச் சுந்தரப் பலகையில்
மறைபுகழ்ந்து ஏத்த மகிழ்ந்துஉட னிருத்திப்
பறைஒலி யோடு பணிவளை ஆர்ப்ப
வதுவைக்கு ஏற்ற மறைவிதி நெறியோ
சதுர்முகன் ஓமச் சடங்குகள் இயற்றத்
தறுகலன் ஒளிபொன் தாலி பூட்டிச்
சிறுமதி நுதலியைச் சிவன்கைப் பிடித்த பின்
அரிவலஞ் சூழ எரிவலம் வந்து
பரிவுடன் மளமளப் பாயலில் வைகிப்
போது அணி கருங்குழற் பூவைதன் உடனே
ஓதநீர் வேலைசூழ் உஞ்சை ஆம் பதிபுக
ஏரார் வழியின் எண் திசை தன்னைப்
பாரா தேவா பனிமொழி நீஎன
வருங்கருங் குழலாள் மற்றும் உண்டோ எனத்
திருந்து இழை மடந்தை திரம்பினள் பார்க்கக்
களிறும் பிடியும் கலந்து விளையாடல் கண்டு
ஒளிர்மணி பூணாள் உரவோன் உடனே
இவ்வகை யாய்விளை யாடுவோம் ஈங்கென
அவ்வகை அரனும் அதற்கு உடன் பட்டு
மதகரி உரித்தோன் மதகரி யாக
மதர்வழி உமைபிடி வடிவம் தாகிக்
கூடிய கலவியிற் குவலயம் விளங்க
நீடிய வானோர் நெறியுடன் வாழ
அந்தணர் சிறக்க ஆனினம் பெருகச்
செந்தழல் வேள்விவேத ஆகமஞ் சிறக்க
அறம்பல பெருக மறம்பல சுருங்கத்
திறம்பல அரசர் செகதலம் விளங்க
வெங்கரி முகமும் வியன்புழைக் கையோடு
ஐங்கர தலமும் மலர்ப்பதம் இரண்டும்
பவளத்து ஒளிசேர் பைந்துர் வாயுந்
தவளக் கிம்புரித் தடமருப்பு இரண்டுங்
கோடிசூ ரியர்போற் குலவிடு மேனியும்
பேழைபோல் அகன்ற பெருங்குட வயிறும்
நெற்றியில் நயனமும் முப்புரி நூலுங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்றைச் சடையுங் கனநீள் முடியுந்
தங்கிய முறம்போல் தழைமடிச் செவியுமாய்
ஐங்கரத்து அண்ணல் வந்துஅவ தரித்தலும்
பொங்கரவு அணிந்த புண்ணிய மூர்த்தியும்
மங்கை மனமிகு மகிழ்ந்துஉடன் நோக்கி
விண்ணு ளோர்களும் விரிந்தநான் முகனும்
மண்ணு ளோர்களும் வந்து உனை வணங்க
ஆங்குஅவர் தங்கட்கு அருள்சுரந்து அருளித்
தீங்கது தீர்த்துச் செந்நெறி அளித்துப்
பாரண மாகப் பலகனி அருந்தி
ஏரணி ஆலின்கீழ் இனிதிரு என்று
பூதலந் தன்னிற் புதல்வனை இருத்திக்
காதல்கூர் மடநடைக் கன்னியுந் தானும்
மைவளர் சோலை மாநகர் புகுந்து
தெய்வ நாயகன் சிறந்து இனிது இருந்தபின்
வானவ ராலும் மானுட ராலுங்
கான் அமர் கொடிய கடுவிலங் காலும்
கருவிக ளாலும் கால னாலும்
ஒருவகை யாலும் உயிர்அழி யாமல்
திரம்பெற மாதவஞ் செய்துமுன் னாளில்
வரம்பெறு கின்ற வலிமையி னாலே
ஐமுகச் சீயமொத்து அடற்படை சூழக்
கைமுகம் படைத்த காயமுகத்து அவுணன்
பொன்னுலகு அழித்துப் புலவரை வருத்தி
இந்நிலத் தவரை இடுக்கண் படுத்திக்
கொடுந்தொழில் புரியுங் கொடுமைகண்டு ஏங்கி
அடுந்தொழிற் குலிசத்து அண்ணலும் அமரருங்
கறைபடு கண்டக் கடவுளைப் போற்றி
முறையிடக் கேட்டு முப்புரம் எரித்தோன்
அஞ்சலீர் என்று அவர்க்கு அபயங் கொடுத்தே
அஞ்சுகைக் கரிமுகத்து அண்ணலை நோக்கி
ஆனை மாமுகத்து அவுணனோடு அவன்தன்
சேனைகள் முழுவதுஞ் சிந்திடப் பொருது
குன்றுபோல் வளர்ந்த குறட்படை கூட்டி
வென்றுவா என்று விடைகொடுத்து அருள
ஆங்கு அவன் தன்னோடு அமர்பல உடற்றிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாங்குறும் அவன்படை பற்று அறக் கொன்றபின்
தேர்மிசை ஏறிச் சினங்கொடு செருவிற்
கார்முகம் வளைத்த கயமுகா சுரன்மேல்
ஒற்றை வெண் மருப்பை ஒடித்துஅவன் உதிரித்திற்
குற்றிட எறிந்தான் குருதிசோர்ந் திடவே
சோர்ந்து அவன் வீழ்ந்து துண்ணென எழுந்து
வாய்ந்தமூ டிகதபயட வந்து அவன் பொரவே
வந்த மூடிகத்தை வானம் ஆக்கி
எந்தை விநாயகன் ஏறினன் இப்பால்
எறிந்தவெண் மருப்புஅங்கு இமைநொடி அளவிற்
செறிந்தது மற்றவன் திருக்கரத் தினிலே
வெல்லவைக் கதிர்வேல் விழிபடைத்து அருளும்
வல்லவை தனைத்தன் மனைஎன மணந்தே
ஓகையோடு எழுந்தஅங்கு உயர்படை சூழ
வாகையும் புனைந்து வரும்பழி தன்னிற்
கருச்சங் கோட்டிற் கயல்கழுகு ஏறுந்
திருச்செங்கோட்டிற் சிவனைஅர்ச் சித்துக்
கணபதீச் சரம்எனுங் காரண நாமம்
பணபதி புகழ்தரு பதிக்குஉண் டாக்கிச்
சங்கரன் பார்பதி தனிமனம் மகிழ
இங்குவந்து அன்புடன் எய்திய பின்னர்க்
கணங்களுக்கு அரசாய்க் கதிர்முடி சூட்டி
இணங்கி பெருமைபெற்று இருந்திட ஆங்கே
தேவர்கள் முனிவர் சித்தர்கந் தருவார்
யாவரும் வந்துஇவண் ஏல்செய்திடுநாள்
அதிகமாய் உரைக்கும் ஆவணித் திங்களின்
மதிவளர் பக்கம் வந்திடு சதுர்த்தியில்
விநாயகர்க்கு உரிய விரதம் என்று எண்ணி
மனாதிகள் கழித்து மரபொடு நோற்றார்
இப்படி நோற்றிட்டு எண்ணிய பெருநாள்
ஒப்பரும் விரதத்து உறும்ஒரு சதுர்த்தியில்
தோற்றுநற் பூசை நுடங்காது ஆற்றிப்
போற்றிசெய் திட்டார் புலவர் ஐங்கரனை
மருமலர் தூவும் வானவர் முன்னே
திருமலன் குமரன் நிருத்தம் புரிந்தான்
அனைவரும் கைதொழுது அடிஇணை போற்ற
வனைகழற் சந்திரன் மனச்செருக்கு அதனால்
பேழைபோல் வயிறும் பெருத்தகாத் திரமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாழ்துளைக் கையுந் தழைமுறச் செவியுங்
கண்டனன் நகைத்தான் கரிமுகக் கடவுளுங்
கொண்டனன் சீற்றங் குபேரனை நோக்கி
என்னைக் கண்டு இங்கு இகழ்ந்தனை சிரித்தாய்
உன்னைக் கண்டவர் உரைக்கும் இத்தினத்திற்
பழியொடு பாவமும் பலபல விதனமும்
அழிவும்எய் துவரென்று அசனிபோற் சபித்தான்
விண்ணவர் எல்லாம் மிகமனம் வெருவிக்
கண்ணருள் கூருங் கடவுள் இத் தினத்திற்
கோரவெஞ் சினமிகக் கொண்டனன் அந்நாள்
மார்கழித் திங்கள் மதிவளர் பக்கஞ்
சதயந் தொட்ட சட்டிநல் விரதமென்று
இதயத்து எண்ணி யாவரும் நோற்றார்
இப்புவி மாந்தர் இயம்பிய விரதம்
வைப்புடன் தோற்ற வகைஇனிச் சொல்வாம்
குருமணி முடிபுனை குருகுலத் துதித்த
தருமனும் இளைய தம்பியர் நால்வருந்
தேவகி மைந்தன் திருமுகம் நோக்கி
எண்ணிய விரதம் இடையூறு இன்றிப்
பண்ணிய பொழுதே பலிப்பு உண்டாகவுஞ்
செருவினில் எதிர்த்த செறுநரை வென்று
மருமலர்ப் புயத்தில் வாகை சூடவும்
எந்தத் தெய்வம் எவ்விர தத்தை
வந்தனை செய்யில் வருநமக்கு உரையெனப்
பாட்டுஅளி துதையும் பசுந்துழாய் மார்பனுங்
கேட்டருள் வீர்எனக் கிளத்துதல் உற்றான்
அக்குநீ றணியும் அரன்முதல் அளித்தோன்
விக்கினந் தீர்க்கும் விநாய மூர்த்தி
ஓடவைத் திடும்பொன் ஒத்துஒளி விளங்குங்
கோடி சூரியற்போற் குலவிய மேனியன்
கடகரி முகத்தோன் காத்திரம் பெருந்தோன்
தடவரை போலுஞ் சதுர்புயம் உடையோன்
சர்வ ஆபரணமுந் தரிக்கப் பட்டவன்
உறுமதிக் குழவிபோல் ஒரு மருப்பு உடையோன்
ஒரு கையில் தந்தமும் ஒரு கையிற் பாசமும்
ஒருகையில் மோதகம் ஒருகையிற் செபஞ்செய்
உத்தம மாலையோன் உறுநினை வின்படி
சித்திசெய் வதனாற் சித்திவி நாயகன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றுஇமை யவரும் யாவருந் துதிப்ப
நன்றி தருந்திரு நாமம் படைத்தோன்
புரவலர் காணப் புறப்படும் போதுஞ்
செருவினில் யுத்தஞ் செய்திடும் போதும்
வித்தியா ரம்பம் விரும்பிடும் போதும்
உத்தியோ கங்கள் உஞற்றிடும் போதும்
ஆங்குஅவன் தன்னை அருச்சனை புரிந்தால்
தீங்குஉறாது எல்லாஞ் செயம் உண்டாகும்
கரதலம் ஐந்துடைக் கணபதிக்கு உரிய
விரதம்ஒன் றுஉளதுஅதை விரும்பிநோற் றவர்க்குச
சந்ததி தழைத்திடுஞ் சம்பத்து உண்டாம்
புந்தியில் நினைந்த பொருள்கை கூடும்
மேலவர் தம்மையும் வென்றிட லாம்எனத்
தேவகி மைந்தன் செப்பிடக் கேட்டு
நுவலரும் விரதம் நோற்றிடும் இயல்பும்
புகர்முகக் கடவுளைப் பூசைசெய் விதமும்
விரித்து எமக்கு உரைத்திட வேண்டும் என்ற இரப்ப
வரைக்குடை கவித்தோன் வகுத்துஉரை செய்வான்
தேருநீர் ஆவணித் திங்களின் மதிவளர்
பூர்வ பக்கம் புணர்திடு சதுர்த்தியின்
முந்தும் புலரியின் முறைநீர் படிந்து
சந்தி வந்தனந் தவறாது இயற்றி
அத்தினம் அதனில் ஐங்கரக் கடவுளைப்
பக்தியோடு அர்ச்சனை பண்ணுதல் வேண்டும்
வெள்ளியாற் பொன்னால் விளங்கும் அவன்றன்
ஒள்ளிய அருள்திரு உருஉண் டாக்கிப்
பூசனை புரியப் புகன்றனர் பெரியோர்
ஆகஇலா மண்ணால் அமைத்தலும் தகுமால்
பூசைசெய் திடும்இடம் புனிதமது ஆக்கி
வாசமென் மலரின் மங்சரி தூக்கிக்
கோடிகங் கோசிகங் கொடிவிதா னித்து
நீடிய நூல்வளை நிறைகுடத்து இருத்தி
விந்தைசேர் சித்தி விநாயகன் உருவைச்
சிந்தையின் நினைந்து தியானம் பண்ணி
ஆவா கனம்முதல் அர்க்கிய பாத்தியம்
வாகா ராச மனம்வரை கொடுத்து
ஐந்துஅமர் தத்தால் அபிடே கித்துக்
கந்தஞ் சாத்திக் கணேசமந் திரத்தால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈசர புத்திரன் என்னும்மந் திரத்தால்
மாசுஅகல் இரண்டு வத்திரஞ் சாத்திப்
பொருந்துஉமை சுதனாப் புகலுமந் திரத்தால்
திருந்தும் பளிதத் தீபங் கொடுத்துப்
பச்சறுகு உடன்இரு பத்தொரு விதமாப்
பத்திர புட்பம் பலபல கொணர்ந்தே
உமாசுதன் கணாதிபன் உயர்கரி முகத்தோன்
குமார குரவன் பாசஅங் குசகரன்
ஏக தந்தன் ஈசுரன் புத்திரன்
ஆகு வாகனன் அருள்தரு விநாயகன்
சர்வகா ரியமுந் தந்துஅருள் புரிவோன்
ஏரம்ப மூர்த்தி என்னும்நா மங்களால்
ஆரம் பத்துடன் அர்ச்சனை பண்ணி
மோதகம் அப்பம் முதற்பணி காரந்
தீதகல் மாங்கனி நீங்கத லிப்பழம்
வருக்கை கபித்த மாதுளங் கனியோடு
தரித்திடு நெட்டிலைத் தாழைமுப் புடைக்காய்
பருப்புநெய் பொரிக்கறி பால்தயிர் போனகம்
விரும்புள சுவைப்பொருள் மிகவும்முன் வைத்து
உருத்திரப் பிரியஎன்று உரைக்கும்மந் திரத்தால்
நிருத்தன் மகற்கு நிவேதனங் கொடுத்து
நற்றவர் புகன்றநா னான்குஉப சாரமும்
மற்றவன் திருவுளம் மகிழ்ந்திடச் செய்து
எண்ணுந் தகுதி இருபிறப் பாளர்க்கு
உண்அறு சுவைசேர் ஓதனம் நல்கிச்
சந்தனம் முத்துத் தானந் தக்கிணை
அந்தணர்க்கு ஈந்திட்டு அருச்சகன் தனக்குத்
திருத்தகு விநாயகத் திருவுரு வத்தைத்
தரித்தவத் திரத்துடன் தானமாகக் கொடுத்து
நைமித் திகம்என நவில்தரு மரபால்
இம்முறை பூசனை யாவர்செய் தாலும்
எண்ணிய கருமம் யாவையும் முடிப்பர்
திண்ணிய செருவிற் செயம்மிகப் பெறுவர்
அரன்இவன் தன்னைமுன் அர்ச்சனை பண்ணிப்
புரம்ஒரு மூன்றும் பொடிபட எரித்தான்
உருத்திரன் இவனை உபாசனை பண்ணி
விருத்திரா சுரனை வென்றுகொன் றிட்டான்
அகலிகை இவன் தாள் அர்ச்சனை பண்ணிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகர்தருங் கணவனைப் பரிவுடன் அடைந்தாள்
தண்ஆர் மதிமுகந் தாள்தம யந்தி
அன்னாள் இவனை அர்ச்சனை பண்ணி
நண்ணார் பரவும் நளனை அடைந்தாள்
ஐங்கரக் கடவுளை அர்ச்சனை பண்ணி
வெங்கத நிருதரை வேர்அறக் களைந்து
தசரதன் மைந்தன் சீதையை அடைந்தான்
பகிரதன் என்னும் பார்த்திவன் இவனை
மகிதலந் தன்னில் மலர்கொடுஅர்ச் சித்து
வரநதி தன்னை வையகத்து அழைத்தான்
அட்டதே வதைகளும் அர்ச்சித்த இவனை
அட்ட போகத்துடன் அமிர்தமும் பெற்றார்
உருக்குமணி என்னும் ஒண்டொடி தன்னைச்
செருக்கொடு வவ்விச் சிசுபா லன்றான்
கொண்டுபோம் அளவிற் குஞ்சர முகவை
வண்டுபாண் மிழற்றா மலர்கொடுஅர்ச் சித்துத்
தாரியின் மறித்தவன் தனைப்புறங் கண்டு
யாமும் அங்கு அவளை இன்புறப் பெற்றோம்
புகர்முகக் கடவுளைப் பூசனை புரிந்து
மிகமிக மனத்தில் விழைந்தன பெற்றார்
இப்புவி தன்னில் எண்ணுதற்கு அரிதால்
அப்படி நீவிரும் அவனைஅர்ச் சித்தால்
எப்பொருள் விரும்பினீர் அப்பொருள் பெறுவீர்
என்றுகன்று எறிந்தோன் எடுத்திவை உரைப்ப
அன்றுமுதல் தருமகனும் அனுசரும் இவனைப்
பூசனை புரிந்துகட் புலன் இலான் மைந்தரை
நாசனம் பண்ண நராதிபர் ஆகிச்
சிந்தையில் நினைத்தவை செகத்தினிற் செயங்கொண்டு
அந்தமில் செல்வத்த அரசியல் பெற்றார்
ஈங்குஇது நிற்க இவ்விர தத்துஇயல்
ஓங்கிய காதைமற்று ஒன்றுஉரை செய்வாம்
கஞ்சநான் முகன்தருஞ் காசிபன் புணர்ந்த
வஞ்சமனத்தாள் மாயைதன் வயிற்றிற்
சூரன் என்று ஒருவனுந் துணைவருந் தோன்றி
ஆர்கலி சூழ்புவி அனைத்தையும் அழித்தே
சீருடைச் சுவர்க்கத் திருவளங் கொடுத்தும்
புரந்தரன் முதலிய புலவரை வருத்தியும்
நிரந்தரந் தீய நெறிநடத் துதலால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயிரங் கண்ணனும் அமரரும் முனிவரும்
நீஇரங்கு எமக்குஎன நெடுங்கரங் கூப்பி
இரசத கிரிஉறை இறைவனை வணங்கி
வரமிகுஞ் சூரன் வலிமைகள் உரைக்கச்
சுடர்விடு மணிமுடிச் சூரனை வெல்லக்
கதிர்விடு வடிவேல் கரதலத்து ஏந்தும்
புதல்வனைத் தருவோம் போமின் நீர்என்
அமரர் கோனுக்கு அரன்விடை கொடுத்துச்
சமர வேல்விழத் தையலுந் தானுங்
கூடிய கலவியிற் கூடாது ஊடலும்
ஓடிய வானோர் ஒருங்குஉடன் கூடிப்
பாவகன்தன்னைப் பரிவுடன் அழைத்துச்
சூரன் செய்யுந் துயரம் எல்லாம்
ஊர் அரவு அணிந்தோற்கு உரையென உரைப்பக்
காமனை எரித்த கடவுள்என்று அஞ்சிப்
பாவகன் பயமுறப் பயம்உனக்கு ஏதென
உற்றிடுங் கரதலத்து உன்னையே தரித்தான்
நெற்றியின் நயனமும் நீயே ஆதலிற்
குற்றம் அடாது கூறுநீ சென்றென
வானவர் மொழிய மற்றவன் தானுந்
தானும்அச் சபையில் தரியாது ஏகி
எமைஆ ளுடைய உமையா ளுடனே
அமையா இன்பத்து அமர்ந்துஇனிது இருந்த
பள்ளி மண்டபம் பாவகன் குறுகலும்
ஒள்ளிய மடந்தை ஒதுங்கிநா ணுதலுந்
தெள்ளிதிற் பரமனுங் தேயுவைக் கண்டே
அறுமுகப் பிள்ளையை அவன்கையில் ஈதலும்
வறியவன் பெற்ற வான்பொருள் போலச்
சோதி நீள்முடிச் சுடரோன் கொணர்ந்து
வாத ராசன் மலர்கையிற் கொடுப்ப
நீதி யோடு நின்றுகை யேந்திப்
போதநீள வாயுவும் பொறுக்கஒண் ணாமல்
தரும்புனற் கங்கை தன்கையிற் கொடுப்பத்
தரும்புனற் கங்கையும் தாங்க ஒண்ணாமற்
பொருந்திரைச் சரவணப் பொய்கையில் வைப்பத்
தண்ஆர் வதனத் தாமரை ஆறுங்
கண்ஆ றிரண்டுங் கரம்ஈ ராறும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூண்எனத் திரண்ட தோள் ஈராறும்
மாண்அயில் ஆதி வான்படை யுங்கொண்டு
ஆறுமுகக் கடவுள்அங்கு அவதரித் திடலும்
மறுகிய உம்பர் மகிழ்வுடன் கூடி
அறுமீன் களைப்பால் அளித்திர் என்று அனுப்ப
ஆங்கவர் முலைஉண்டு அறுமுகன் தானும்
ஓங்கிய வளர்ச்சி உற்றிடு நாளில்
விமலனும் உமையும் விடையு கைத்து ஆறு
தலைமகன் இருந்த சரவணத்து அடைந்து
முருகுஅலர் சூழல்உமை முலைப்பால் ஊட்ட
இருவரும் இன்பால் எடுத்துஎடுத்து அணைத்துத்
தேவர்தம் படைக்குச் சேனா பதியெனக்
காவல் கொண்டு அளிக்கக் கதிர்முடி சூட்டி
அயில்வேல் முதற்பல ஆயுதங் கொடுத்துத்
திசைஎலாஞ் செல்லுந் தேரும்ஒன்று உதவிப்
பூதப் படைகள் புடைவரப் போய்நீ
ஓதுறும் அவுணரை ஒறுத்திடுஎன்று அனுப்ப
இருளைப் பருகும் இரவியைப் போலத்
தகுவரென்று அவரைச் சமரிடை முருக்கிக்
குருகுப் பேர்பெறுங் குன்றமுஞ் சூரன்
மருமமுந் துளைபட வடிவேல் விடுத்தே
யாவரும் வியப்புற இந்திரன் மகளாந்
தேவகுஞ் சரியைத் திருமணம் புணர்ந்திட்டு
அமரர் கோனுக்கு அமருலகு அளித்துக்
குமர வேளுங் குவலயம் விளங்க
அமரா வதியில் அமர்ந்து இனிதே இருந்தான்
சமர வேலுடைச் சண்முகன் வடிவுகண்டு
அமரர் மாதர் அனைவரும் மயங்கி
எண்டருங் கற்பினை இழந்தது கண்டே
அண்டர் எல்லாம் அடைவுடன் கூடி
மாதொரு பாகனை வந்துஅடி வணங்கி
மருமலர்க் கடம்பன்எம் மாநகர் புகாமல்
அருள்செய வேண்டும்நீ அம்பிகா பதியென
இமையவர் உரைப்ப இறையவன் தானுங்
குமரனைக் கோபங் கொண்டுமுன் முனியக்
காவல் கொண்டு எம்வினை கட்டறுத்து அருளுஞ்
சேவலங் கொடியோன் தேசம் போகத்
திருந்திழை உமையாள் அருந்துயர் எய்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருந்திமுன் நிற்க மங்கையைப் பார்த்து
மங்கை நீதான் வருந்துதல் ஒழிகுதி
அங்கையாற் சூதெறிந்து ஆடுவோம் வாவென
வெள்றதுந் தோற்றதும் விளம்புவார் யாரெனக்
குன்றமென் முலையாள் கூறிய சமயம்
புற்றுஅரவு அணிந்த புனிதனைக் காணஅங்கு
உற்றனன் திருமால் ஊழ்வினை வலியாற்
சக்கிர பாணியைச் சான்றெனக் குறித்து
மமிக்கதோர் சூது விருப்புடன் ஆடச்
சாயக நேருந் தடநெடுங் கருங்கண்
நாயகி வெல்ல நாயகன் தோற்ப
இன்பவாய் இகழ்உமை யான்வென் றேன்என
எம்பெரு மானும் யான்வெல் றேன்என
ஒருவர்க் கொருவர் உத்தரம் பேசி
இருவரும் சாட்சி இவனைக் கேட்ப
மாமனை வதைத்த மால்முகம் நோக்கிக்
காமனை எரித்தோன் கண்கடை காட்ட
வென்ற நாயகி தோற்றாள் என்றுந்
தோற்ற நாயகன் வென்றான் என்றும்
ஒன்றிய பொய்க்கரி உடன்அங்கு உரைப்பக்
கன்றிய மனத்தொழு கவுரிஅங்கு உருத்து
நோக்கிநீ இருந்தும் நுவுன்றிலை உண்மை
வாக்கினில் ஒன்றாய் மனத்தினில் ஒன்றால்
மைக்கரி உரித்தோன் வதனம் நோக்கிப்
பொய்க்கரி உரைத்த புன்மையி னாலே
கனல்என வயிற்றிற் கடும்பசி கனற்ற
நிலமிசைக் குருட்டு நெட்டுடற் பாம்பாய்க்
கடகரி முகத்துக் கடவுள்வீற்று
வடதரு நிழலிற் கிடவெனச் சபித்தாள்
முளரிகள் பூத்த முகில்நிறத்து உருப்போய்த்
துளவுஅணி மருமனுந் துணைவிழி இழந்தே
ஆண்டுஅரைக் கணத்தில் ஆயிரம் யோசனை
நீண்டபைப் பாந்தள் நெட்டுடல் எடுத்து
வளர்மருப்பு ஒனறுடை வள்ளல்வீற்று இருக்குங்
கிளர்சினை ஆலின் கீழ்க்கிடந் தனனால்
திரிகடக் கரியின் திருமுகக் கடவுளும்
வழிபடும் அடியார் வல்வினை தீர்த்தே
எழில்பெறு வடமரத் தின்கீழ் இருந்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கம்பமா முகத்துக் கடவுள்தன் பெருமையை
அம்புவி யோருக்கு அறிவிப்போம்என
உம்பர் உலகத்து ஓரெழு கன்னியர்
தம்பநூல் ஏணியில் தாரணி வந்து
கரிமுகக் கடவுளைக் கைதொழுது ஏத்திக்
கார்த்திகைக் கார்த்திகை கழிந்தபின் நாளில்
ஆர்த்த கலிங்கத்து அணியிழை வாங்கி
இருபத் தோர்இழை இன்புறக் கட்டி
ஒருபோது உண்டி உண்டுஒரு மனமாய்
வேதத்து ஆதியும் பூமியில் எழுத்தும்
ஆதிவி நாயகற்கு ஆன எழுத்தும்
மூன்றுஎழுத் ததனால் மொழிந்தமந் திரமும்
தேன்தருங் குழலியர் சிந்தையுட் செபித்தே
உரைதரு பதினாறு உபசா ரத்தால்
வரைமகள் மதலையை வழிபாடு ஆற்றி
இருபது நாளும் இப்படி நோற்று
மற்றநாள் ஐங்கர மாமுகன் பிறந்த
அற்றைநாட் சதயமும் ஆறாம் பக்கமுஞ்
சேரும்அத் தினத்தில் தெளிபுனல் ஆடி
வாரண முகத்தோன் வருபெருங் கோயில்
சீர்பெற மெழுகித் திருவிளக்கு ஏற்றிக்
குலவுபொற் கலைகள் கொடுவி தானித்து
மலர்பல தொடுத்திடு மாலைகள் ஆற்றிக்
கொலைபுரி வடிவேற் குகற்குமுன் வருகை
மலைமுககள் கடவுளை மஞ்சனம் ஆட்டிப்
பொற்கலை நல்நூற் பூந்துகில் சாத்திச்
சொற்பெறு சந்தனஞ் சுகந்தம் பூசிச்
செருந்தி சண்பகஞ் செங்கழு நீரொடு
குருந்து மல்லிகை கோங்கொடு பிச்சி
கருமுகை புன்னை கடிகமழ் பாதிரி
மருவிரி ஞாழல் மகிழ்இரு வாட்சி
தாமரை முல்லை தளைஅவிழ் கொன்றை
பூமலர் நொச்சி பூத்தமைக் குவளை
காந்தள் ஆத்தி கடம்புசெவ் வந்தி
வாய்ந்தநல் எருக்கு மலர்க்கர வீரம்
பச்சிலை நொச்சி படர்கொடி அறுகு
முத்தளக் கூவிளம் முதலிய சாத்தித்
தூபநீ பங்கள் சுகம்பெறக் கொடுத்தே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பம் மோதகம் அவல்எள் ளுருண்டை
முப்பழந் தேங்காய் முதிர்மொளிக் கரும்பு
சீனிதேன் சர்க்கரை செவ்விள நீருடன்
பால்நறு நெய்தயிர் பருப்புடன் போனகங்
கற்பகக் கடவுள் களித்திடத் திருமுன்
பொற்புறப் படைத்துப் பூசனை பண்ணி
நோற்பது கண்டு நோலாது இருந்த
பாப்புரு வாகிய பஞ்சா யுதனும்
யாப்புறு கொங்கையீர் யானும் நோற் பேனென
ஆங்குஅவன் தனக்கும் வேண்டுவது அளித்துப்
பாங்கொடுஇவ் விரதம் பரிந்துநோற் பித்தார்
அண்டர்நா யகனாம் ஐங்கரன் அருளால்
விண்டுவும் பண்டுஉள வேடம் பெற்றே
உஞ்ஞைமா நகர்புகுந்து உமையொடு விமலன்
கஞ்சநாள் மலர்ப்பதங் கைதொழு திடலும்
பங்சிமென் சீறடிப் பார்ப்பதி நெஞ்சின்
வெஞ்சினம் மிகுந்த விமலனை நோக்கி
யான்இடுஞ் சாபம் நீங்கியது ஏனென
மானெடுங் கண்ணி மணிக்கதவு அடைப்ப
இறையவன் அதற்குக் காரணம் ஏதென
மறிகடல் துயிலும் மாயவன் உரைப்பான்
பிறைமருப்பு ஒன்றுடைப் பிள்ளைஅன்று எனக்குத்
தந்துஅருள் புரிந்த தவப்பயன் ஈதெனச்
சிந்தை மகிழ்ந்து தேவர் தேவனும்
பூங்கொடி அடை பொன்தாழ் நீங்கச்
சாங்குமுன் உரைத்த சக்கர பாணி
இக்கதை சொல்ல அக்கணி சடையனும்
மிக்கநல் விரதம் விருப்புடன் நோற்றபின்
மாதுமை அடைந்த வன்தாழ் நீக்கி
நாதனை நணுகிட நம்பனும் நகைத்தான்
நானோ வந்து நகையா னதுஎனத்
தேன்நேர் மொழியாள் தெளியக் கூறென
நன்மதி நுதலாய் நானிலந் தன்னில்
உன்மகன் நோன்பின் உறுதி அறிந்து
சிந்தை மகிழ்ந்து சிரித்தேன் யானென
அந்தமில் அரனை ஆயிழை வணங்கிப்
பொருஞ்சூர் அறவேல் போக்கிய குமரன்
வரும்படி யானும் வருத்திநோற் பேனென



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறையவன் கதைசொல் ஏந்திழை நோற்றபின்
குறமட மகளைக் குலமணம் புணர்ந்தோன்
சுடர்வடி வேலோன் தொல்வினை தீர்ந்து
தாதுமை வண்டுஉழுந் தாமத் தாமனை
மாதுமை யாளை வந்துகண் டனனே
கண்ணநீ கண்ணிலாக் கட்செவி யாகெனத்
தண்நறுங் குழல்உமை சாபம்இட் டதுவும்
அக்குநீறு அணியும் அரன்முதல் அளித்த
விக்கின விநாயக விரதம்நோற்று அதன்பின்
சுடர்க்கதை ஏந்துந் துளவ மாலையன்
விடப்பணி உருவம் விட்டுநீங் கியதும்
பரிவுகொள் கூத்துடைப் பரமனும் நோற்றுக்
கவுரிஅன்று அடைத்த கபாடந் திறந்ததும்
வாசமென் குழலுடை மாதுமை நோற்பத்
தேசம் போகிய செவ்வெள் வந்ததும்
வானவர் நோற்று வரங்கள் பெற்றதும்
நாரத முனிவன் நவின்றிடக் கேட்டே
இந்நிலந் தன்னில் இவ்விர தத்தை
மன்னவன் வச்சிர மாலிமுன் நோற்றுக்
காயத் தெழுந்த கடும்பிணி தீர்ந்து
மாயிரும் புவியின் மன்னனாய் வாழ்ந்து
தடமுலைத் தீலோத்தமை தனைமணம் புணர்ந்து
மழவிடை போற்பல மைந்தரைப் பெற்றுக்
கடைமுறை வெள்ளியங் கயிலையில் உற்றான்
பரிவொடுஇவ் விரதம் பரகந் தன்னில்
விரைகழல் நறுந்தார் விக்கிரமா தித்தன்
மறிகடற் புவிபெற வருந்தி நோற்றிடுநாள்
மற்றவன் காதன் மடவரல் ஒருத்தி
இற்றிடும் இடையாள் இலக்கண சுந்தரி
மெத்தஅன் புடன்இவ் விரதம்நொற் பேனென
அத்தந் தன்னில் அணியிழை செறித்துச்
சித்தம் மகிழ்ந்து சிலநாள் நோற்றபின்
உற்ற நோன்பின் உறுதி மறந்து
கட்டிய இழையைக் காரிகை அவிழ்ந்து
வற்றிய கொவ்வையின் மாடே போட
ஆங்குஅது தழைத்தே அலருந் தளிருமாய்ப்
பாங்குற ஓங்கிப் படர்வத கண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேப்பஞ் சேரியிற் போய்ச்சிறை இருந்த
பூப்பயில் குழல்சேர் பொற்பொடி ஒருத்தி
அவ்வியம் இல்லாள் அவ்விடந் தன்னிற்
கொவ்வை அடகு கொய்வாள் குறுகி
இழையது கிடப்பக் கண்டுஅவள் எடுத்துக்
குழைதவிழ் வரிவிழிக் கோதையைக் கட்டி
அப்பமோடு அடைக்காய் அவைபல வைத்துச்
செப்பமுடனே திருந்திழை நொற்றிடக்
கரிமுகத்து அண்ணல் கருணை கூர்ந்து
பண்டையில் இரட்டி பதம்அவட்கு அருளக்
கொண்டுபோய் அரசனுங் கோயிலுள் வைத்தான்
விக்கிரமா தித்தன் விழிதுயில் கொள்ள
உக்கிர மானஉடை மணி கட்டித்
தண்டையுஞ் சிலம்பந் தாளினின்று ஒலிப்பக்
கொண்டல் போல்வருங் குஞ்சர முகத்தோன்
மனமிகக் கலங்கும் மன்னவன் தன்னிடங்
கனவினில் வந்து காரண மாக
இலக்கண சுந்தரி இம்மனை இருக்கிற்
கலக்கம் வந்திடுங் கழித்திடு புறத்தெனத்
துண்ணென எழுந்து துணைவியை நோக்கிக்
கண்ணுறக் கண்ட கனவின் காரணம்
அண்ணல் உரைத்திடும் அவ்வழி தன்னில்
ஆனை குதிரை அவைபல மடிவுற
மாநகர் கேடுறும் வகையது கண்டு
இமைப்பொழுது இவள்இங்கு இருக்கலா காதுஎன
அயற்கடை அவனும் அகற்றிய பின்னர்
வணிகன் தனது மனைபுகுந்து இருப்ப
மணியும் முத்தும் வலியகல் லாய்விட
அணியிழை தன்னை அவனும் அகற்ற
உழவர்தம் மனையில் உற்றுஅவள் இருப்ப
வளர்பயிர் அழிந்து வளம்பல குன்ற
அயன்மனை அவரும் அகற்றிய பின்னர்க்
குயவன் மனையிற் கோற்றொடி செல்லக்
குயக்கலம் உடைந்து கொள்ளை போக
அயற்கடை அவனும் அகற்றிய பின்னர்த்
தூசுதூய் தாக்குந் தொழிலோர் மனைபுகந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூசுகள் எல்லாந் துணிந்துவே றாகத்
தூசரும் அவளைத் தூரஞ் செய்ய
மாலைக் காரன் வளைமனை புகலும்
மாலை பாம்பாம் வகையது கண்டு
ஞாலம் எல்லாம் நடுங்கவந்து உதித்தாய்
சாலவும் பாவிநீ தான்யார் என்ன
வெம்மனம் மிகவும் மேவி முனிவுறா
அம்மனை அவனும் அகற்றிய பின்னர்
அவ்வை செல்லும் அகங்கள் தோறும்
வைதனர் எறிந்தனர் மறியத் தள்ளினர்
கைகொடு குற்றினர் கண்டோர் பழித்தனர்
அவ்வை மீண்டுதன் அகமதிற் சென்று
இவ்வகைக் கன்னிநீ யாரென வினாவக்
காத்தாண்டு உலகு கருணையோடு ஆண்ட
மார்த்தாண்ட ராசன் மாமகள் ஒருத்தி
எல்லார்க்கும் மூத்தாள் இலக்கண சுந்தரி
சொல்லுவிக் கிரம சூரியன் மனையெனச்
சீர்கெட இருந்த தெரிவையை நோக்கி
நீரது கொண்டு நிலம்மெழு கிடுகெனச்
சாணி எடுக்கத் தையலுஞ் சென்றாள்
சாணியும் உழுத்துத் தண்ணீர் வற்றிப்
பேணிய புழுவாய்ப் பெரிது தோன்ற
மான்நேர் விழியாள் வருந்துதல் கண்டு
தானே சென்று சாணி எடுத்துத்
தண்ணீர் கொணர்ந்து தரைமெழுக் கிட்டு
மண்ணிய வீட்டில் மணிவிளக்கு ஏற்றிப்
புத்தகம் எடுத்து வாவெனப் புகலப்
புத்தகம் பாம்பாய்ப் பொருந்திநின்று ஆட
மெத்தஉள் நடுங்கி வீழ்ந்துஅவள் கிடப்பக்
கொவ்வையங் கனிவாய்க் கோதையை விலக்கி
அவ்வை தானே அகமதிற் சென்று
புத்தகம் எழுத்துப் பொருந்தப் பார்த்து
வித்தக நம்பி விநாயக மூர்த்தி
கற்பகப் பிள்ளைசெய் காரியம் இதுவென
உத்தமி அவ்வை உணர்ந்துமுன் அறிந்து
தவநெறி பிழைத்த தையலை நோக்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நுவலரும் விநாயக நோன்புநோற் றிடுகெனக்
கரத்து மூஏழுஇழைக் காப்புக் கட்டி
அப்பமும் அவலும் மாம்பழ பண்டமுஞ்
செப்பம தாகத் திருமுன் வைத்தே
அவ்வை கதைசொல் மகாவிர தத்தை
வித்தக மாக விளங்குஇழை நோற்றுக்
கற்பக நம்பி கருணைபெற்றதன் பின்
சக்கர வாள சைனியத் தோடு
விக்கிரமா தித்தன் வேட்டையிற் சென்று
தானுஞ் சேனையுந் தண்ணீர் விரும்பி
எவ்வகை செய்வோம் எனஉளம் மெலிந்தே
அவ்வை தன்மனை அங்குஅவர் அணுக
எய்துந் தாகமும் இளைப்புங் கண்டு
செவ்வே அவற்றைத் தீர்க்க எண்ணி
இலக்கண சுந்தரி என்பவள் தன்னை
அப்பமும் நீரும் அரசற்கு அருளெனச்
செப்பிய அன்னை திருமொழிப் படியே
உண்நீர்க் கரகமும் ஒருபணி காரமும்
பண்நேர் மொழியாள் பார்த்திபற்கு உதவ
ஒப்பறு படையும் உயர்படை வேந்தனும்
அப்பசி தீர அருந்திய பின்னர்
ஆனை குதிரை அவைகளும் உண்டுந்
தானது தொலையாத் தன்மையைக் கண்டே
இவ்வகை சமைத்தநீ யாரென வினவ
மவ்வல்அம் குழலாள் மௌனமாய் நிற்ப
அவ்வை தான்சென்று அரசற்கு உரைப்பாள்
கணபதி நோன்பின் காரணங் காண்இது
குணமடை இவள்உன் குலமனை யாட்டி
இலக்கண சுந்தரி என்று அவ்வை கூற
மங்கையை நோக்கி மனமிக மகிழ்ந்து
திங்கள்நேர் வெள்ளிச் சிவிகையில் ஏற்றிக்
கொண்டுஊர் புகுந்தான் கொற்ற வெந்தனும்
ஒண்தொடி யாரில் உயர்பதம் உதவினன்
சிந்துர நுதலார் சென்றுஅடி பணியச்
சுந்தரி யிருந்தாள் சுகத்துடன் மகிழ்ந்தே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காப்பு

கரும்பும் இளநீருங் காரெள்ளுந் தேனும்
விரும்பும் அவல்பலவும் மேன்மேல் - அருந்திக்
குணமுடைய னாய்வந்து குற்றங்கள் தீர்க்குங்
கணபதியே இக்கதைக்குக் காப்பு.

திருவிளக்கு மான்மருகா சேவதனில் ஏறி
வரும்அரன்தான் ஈன்றருளு மைந்தா - முருகனுக்கு
முன்பிறந்த யானை முகவர் உனைத்தொழுவேன்
என் கதைக்கு நீஎன்றுங் காப்பு.

## நூற்பயன்

பொன்னுமிகும் கல்விமிகும் புத்திரரோடு எப்பொருளும்
மன்னும் நவமணியும் வந்துஅணுகும் - உன்னி
ஒருக்கொம்பின் யானைமுக உத்தமனார் நோன்பின்
திருக்கதையைக் கேட்கச் சிறந்து.

பொற்பணைக்கை முக்கண் புகர்முகத்துப் பொன்மவுலிக்
கற்பகத்தின் நோன்பின் கதைதன்னைச் - சொற்பெருகக்
கற்றவரும் நோற்றவருங் காதலித்துக் கேட்டவரும்
பெற்றிடுவர் கற்பகத்தின் பேறு.

வெள்ளி எருதுஏறும் விரிசடையோன் பெற்றுஎடுத்த
பிள்ளையார் நோன்பின் பெருங்கதையை - உள்ளபடி
நோற்றார் மிகவாழ்வார் நொலாது அருகுஇருந்து
கேட்டோர்க்கும் வாராது கேடு.

சூலிலார் நோற்கிற் சுதரை மிகப்பெறுவார்
சாலமிகும் வெங்கலியார் தாம்நோற்கில் - மேலைப்
பிறப்புஎல்லாம் நல்ல பெருஞ்செல்வம் எய்திச்
சிறப்பிலே வாழ்வார் சிறந்து.

**திருச்சிற்றம்பலம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமுத மொழிகள்

- கல்வியின் வேர்கள் கசப்பானது,
  ஆனால் அதன் கனிகள் இனிப்பானவை.
- பிறப்பு அன்னையால் சிறப்பு கல்வியால்.
- அறியாமையுடன் நூற்றாண்டுகள் ஒருவன் வாழ்வதை விட,
  அறிவுடன் ஒரு நாள் வாழ்வதே மேலானது.
- தன் காலில் நிற்க எது உதவுமோ அது கல்வி.
- வெளிச்சம் நிச்சயம் இருளைப் போக்கி விடும்,
  அதேபோல் உண்மை நிச்சயம் நன்மையே செய்யும்.
- பணிவு என்பது தாழ்வின் சின்னமல்ல,
  உயர்ந்த ஒழுக்கத்தின் அறிகுறி.
- அறிவு உள்ளவனுக்கும் முயற்சி உள்ளவனுக்கும்
  வறுமை தடையாகாது.
- உழைப்பு உடலைப் பலப்படுத்தும்,
  துன்பங்கள் மனதைப் பலப்படுத்தும்.
- உற்சாகத்துடன் இருக்கத் தொடங்குவதுதான் –
  நீ ஆன்மீக வாழ்க்கை வாழ ஆரம்பிப்பதற்கான முதல் அறிகுறி.
- மனிதனுக்கு மன அமைதியைத் தருவதுதான்
  மதத்தின் அடிப்படை லட்சியம்.
- கண்டனச் சொல் எதையுமே சொல்ல வேண்டாம்.
  உதடுகளை மூடிக்கொண்டு
  உங்கள் இதயங்களைத் திறந்து வையுங்கள்.
- உன்நிலை எப்படிப்பட்டதாக இருந்தாலும்
  அதைக் குறித்து நீ கவலைப்பட வேண்டாம்.
  லட்சியத்தைப் பற்றிக் கொண்டு முன்னேறிய படியே இரு.
- அறிவுச் சுரங்கத்தை திறப்பதற்கான திறவுகோல்
  மன ஒருமைப்பாடு ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன் மொழிகள்

துன்பத்தை விடத் துயரமானது அதைப்பற்றிய அச்சம்தான்.

- சாணக்கியன் -

தைரியமே நம்முடைய மிக நெருங்கிய நண்பன்

- ஷேக்ஸ்பியர் -

திட்டி வாழ்ந்தவரும் இல்லை, வாழ்ந்து கெட்டவரும் இல்லை.

- தாமஸ்புல்லர் -

நற்பண்புகளுக்கு எல்லா இடங்களிலும் வரவேற்புண்டு.

- தாமஸ் அல்வா எடிசன் -

நற்பண்புகளுக்கு எல்லா இடங்களிலும் வரவேற்புண்டு.

- தாமஸ் அல்வா எடிசன் -

நேரத்தை அறிந்தே வீணாக்குபவன்
வாழ்க்கையின் அருமையை உணராதவன்.

- டார்வின் -

எந்த வேலையையும் தன் விருப்பத்திற்கு ஏற்றதாக
மாற்றுபவன் எவனோ, அவனே அறிவாளி.

- விவேகானந்தர் -

பிறர் தவறுகளைக் கண்டு தன் தவறுகளைத்
திருத்திக் கொள்பவன் அறிவாளி.

- காந்திஜி -

அவமானப்படும்போது அமைதியாய் இரு.

- பகவத்கீதை -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்து

மறையோடு சைவம் வாழ்க மானிலம் செழித்து வாழ்க
கறைமிடற் றண்ணலார்தம் அடியவர் இனிதுவாழ்க
பொறையோடு வாய்மை போற்றிப் புவியினில் மாந்தரெல்லாம்
பிறைதவழ் சடையினாரி அருளினால் நீடு வாழ்க.

## வளமுடன் வாழ்க - சிந்தனைத் துளிகள்

| | |
|---|---|
| வணங்கத்தக்கவர்கள் | தாயும் தந்தையும் |
| வந்தால் போகாதது | புகழ் பழி |
| போனால் வாராதது | மானம் உயிர் |
| தானாக வருவது | இளமை முதுமை |
| நம்முடன் வருவது | பாவம் புண்ணியம் |
| அடக்க முடியாதது | பசி தாகம் |
| பிரிக்க முடியாதது | பந்தம் பாசம் |
| அழிவைத் தருவது | பொறாமை கோபம் |
| எல்லோருக்கும் சமமமானவை | பிறப்பும் இறப்பும் |
| வருவதும் போவதும் | இன்பம் துன்பம் |
| மிகமிக நல்ல நாள் | இன்று |
| மிகவும் வேண்டாதது | வெறுப்பு |
| மிகவும் கொடிய நோய் | பேராசை |
| மிகவும் சுலபமானது | குற்றம் காணல் |
| கீழ்த்தரமான விஷயம் | பொறாமை |
| ஆபத்தை விளைவிப்பது | அதிக பேச்சு |
| செய்ய வேண்டியது | உதவி |
| உயர்வுக்கு வழி | உழைப்பு |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவில்கின்றோம்

எமது குடும்பத்தின் ஒளி விளக்காய் வாழ்ந்து எங்கள் நல்வாழ்வுக்காக வழியமைத்து எம்மை எல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்தி மீளாத்துயில் கொண்ட எமது குடும்பத் தலைவர் **திரு. பொன்னுச்சாமி கணேசபிள்ளை** ***அவர் களின்*** மரணச் செய்தி கேட்டு உடன் ஓடி வந்து அனுதாபம் தெரிவத்து ஆறுதல் கூறியவர்களி ற்கும் அன்னாரின் இறுதிச் சடங்கில் நேரில் கலந்து கொண்டவர்களுக்கும். பல வழிகளிலும் உதவி புரிந்து பக்கபலமாக இருந்தவர்களுக்கும். தொலைபேசி மூலமாகவும் மின்ன ஞ்சல் மூலமாகவும் அனுதாபம் தெரிவித்த நண்பர்கள் உறவினர் களுக்கும், அன்போடு உதவிகள் அனைவருக்கும் எமது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

**நன்றி**

**இங்ஙனம்**

**குடும்பத்தினர்.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்ச விருட்சம்

பொன்னுச்சாமி — பரமேஸ்வரி

ஆனந்தராசா + சந்திராதேவி

**கணேசபிள்ளை**

இராஜகோபால் + வதனி

மனோரஞ்சிததேவி + சண்முகராசா

சர்வனாந்தம் + கோமேஸ்வரி

யோகனாந்தம் + அட்டலட்சுமி

மல்லிகாதேவி + பரமநாதன்

கலைவாணி + பஞ்சாட்சரநாதன்

கெளிசகன்

காரணன்

கஜசரவணன்

கலைச்செல்வன் + சி

கஸ்தூரி

கௌதமன்


கயல்வண்ண

கஜீவன்

கௌசிகா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ச விருட்சம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்



எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது.

எது நடக்கிறதோ,
அது நன்றாகவே நடக்கிறது.

எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.

உன்னுடையது எதை இழந்தாய்,
எதற்காக நீ அழுகிறாய்?

எதை நீ கொண்டு வந்தாய்,
அதை நீ இழப்பதற்கு?

எதை நீ படைத்திருந்தாய்,
அது வீணாவதற்கு?

எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.



எதைக் கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.

எது இன்று உன்னுடையதோ
அது நாளை மற்றொருவருடையதாகிறது
மற்றொரு நாள் அது வேறொருவருடையதாகும்.

"இதுவே உலக நியதியும்
எனது படைப்பின் சாராம்சமுமாகும்."

- பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் -

Printed by : Devi Printers Tel : 0112 434534

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org